
Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
MONDAY SEPTEMBER 29 2025

திங்கட்கிழமை 29, செப்டெம்பர் 2025 | ஒளி: 11 கதிர் 059 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# பாண் துண்டில் விரல் தோல் துண்டு



உள்ளூர் பேக்கரியில் இருந்து வாங்கப்பட்ட துண்டுகளாக்கப்பட்ட பாண் துண்டுக்குள் ஒரு விரலில் இருந்து மனித தோலின் ஒரு பகுதியை வாடிக்கையாளர் கண்டுபிடித்துள்ள அதிர்ச்சியூட்டும் சம்பவம் ஹட்டனில் பதிவாகியுள்ளது.

வாடிக்கையாளர் ரூ.180 ரூபாய் கொடுத்து வியாழக்கிழமை (25) இரவு உணவிற்குப் பாண் வாங்கியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. பாண் துண்டை உட்கொள்ளும் போது, அந்த நபர் தோல் துண்டைக் கவனித்து உடனடியாக மேலும் சாப்பிடுவதைத் தவிர்த்தார்.

தொடர்ச்சி P2

## கேபிள் வண்டி விபத்தில்
# காயமடைந்த துறவி மரணம்

குருநாகல், மெல்சிறிபுர நா உயன, ஆரண்ய சேனாசனவில் மடங்களுக்கு இடையே பயணித்த கேபிள் வண்டி, புதன்கிழமை (24) இரவு 9 மணியளவில் உடைந்து வீழ்ந்து விபத்துக்கு உள்ளானதில் படுகாயமடைந்து குருநாகல் ஆதார மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த மற்றொரு பௌத்த துறவி காலமானார்.

சம்பவத்தில் உயிரிழந்த துறவிகளின் இறப்பு எண்ணிக்கை எட்டாக உயர்ந்துள்ளது. சம்பவத்தில் சிக்கிய பௌத்த துறவிகளில் எழுவர் அன்றையதினமே மரணமடைந்தனர். காயமடைந்த ஆறு துறவிகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே அதிலொருவர், சனிக்கிழமை (27) அன்று மரணமடைந்தார்.

சம்பவத்தில் மரணமடைந்த ஏழு துறவிகளில் ஐந்து பேரின் இறுதிச் சடங்குகள் மெல்சிரிபுர - பன்சியகம பொது மயானத்தில், சனிக்கிழமை (27) அன்று அடங்கம் செய்யப்பட்டன.



# சர்வதேச புத்தகக் கண்காட்சி...

சர்வதேச புத்தகக் கண்காட்சி, கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், செப்டெம்பர் 27ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமானது. இந்த கண்காட்சி, ஒக்டோபர் 06 ஆம் திகதி நிறைவடையும்.



# மஹிந்தவை சந்தித்து நன்றி சொன்ன ரணில்

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை தங்காலையில் உள்ள அவரது இல்லத்தில், ஞாயிற்றுக்கிழமை (28) அன்று சந்தித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# கரூரில் துயரம்




தமிழக வெற்றிக் கழக (த.வெ.க) தலைவரும், நடிகருமான விஜய், வாரம்தோறும் சனிக்கிழமை முதல் பிரசார கூட்டங்களை நடத்தி வருகிறார். முதல் கட்டமாகத் திருச்சி, அரியலூரில் பிரசாரத்தைத் தொடங்கிய அவர்,2 ஆம் கட்டமாக நாகை மற்றும் திருவாரூரில் பிரசாரம் செய்தார். அந்த வரிசையில், 3 ஆவது கட்ட பிரசாரத்தை நாமக்கல்லில் சனிக்கிழமை (27) அன்று தொடங்கினார்.

இதற்காக சென்னையில் இருந்து திருச்சிக்கு விமானத்தில் சென்று, அங்கிருந்து நாமக்கல் சென்றார். அங்குக் காலை 8.45 மணிக்கு வருவதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால் விஜய் மதியம் 2.30 மணிக்குப் பிரசார இடத்தை சென்று அடைந்தார்.

அங்கு பிரசாரத்தை முடித்துக்கொண்டு கரூர் புறப்பட்டார். கரூர் வேலுச்சாமிபுரத்தில் சனிக்கிழமை (27) பகல் 12 மணியளவில் தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் பிரசாரம் செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இதனால் அவரை காண காலை முதலே அந்த கட்சியின் தொண்டர்கள் ஏராளமானவர்கள் திரண்டிருந்தனர்.

இதில் பெண்கள், குழந்தைகளும் ஏராளமாக வந்திருந்தனர். அவர்கள் இரவு வரை விஜய் பிரசாரம் செய்ய வந்த இடத்தின் அருகிலேயே காத்திருந்தனர். ஆனால், விஜய்யின் பிரசார வாகனம் மாலை சுமார் 5.40 மணியளவிலேயே கரூரை அடைந்தது. பின்னர் வழிநெடுகிலும் ஏராளமானவர்கள் திரண்டிருந்ததால், விஜய்யின் வாகனம் ஊர்ந்தவாறு பிரசார கூட்டம் நடைபெறும் இடத்திற்கு வந்தது. கட்டுக்கடங்காத கூட்டத்தால், அந்த வாகனம் சுமார் ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்தைக் கடக்க சுமார் ஒன்றரை மணி நேரம் ஆனது. இதையடுத்து அவர் இரவு 7 மணியளவிலேயே கரூரில் பிரசாரம் நடைபெற்ற இடத்தை வந்தடைந்தார்.

தொடர்ச்சி P2



# "அர்ஜூன மகேந்திரன் எங்களுக்கு வேண்டும்"

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை கைது செய்யும் முயற்சிகள் கைவிடப்படவில்லை என்று பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

இதை அடைய தந்திரோபாயங்களைப் பயன்படுத்துவதாகத் தெரிவித்த அமைச்சர், அவர் இலங்கைக்கு அவசியமான ஒரு நபர் என்பதை சிங்கப்பூருக்குத் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

தொடர்ச்சி P2

## மட்டக்களப்பு மாவட்டத்தில்
# 8 மாதங்களில் 105 பேர் த ங்கள் உயிரை மாய்த்தனர்

கனகராசா சரவணன்

13 வயது சிறுமி ஒருவர் தன்னுயிரை மாய்த்துக்கொண்ட சம்பவம், மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் சனிக்கிழமை (27) மாலை இடம்பெற்றுள்ளது.

அதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் ஜனவரியில் இருந்து சனிக்கிழமை (27) வரை 26 பெண்கள் மற்றும் 12 வயது சிறுவன் ஒருவன் உட்பட 8 மாதத்தில் 105 பேர் தங்கள் உயிர்களை மாய்த்துக்கொண்டுள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கொக்கட்டிச்சோலை குளிமடு காஞ்சிரம்குடாவைச் சேர்ந்த 13 வயதுடைய 9ஆம் ஆண்டில் கல்வி கற்று வரும் சிறுமியான லிங்கம் லட்சுமி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P2

# மன்னாரில் இன்று பொது முடக்கம்




எஸ்.ஆர்.லெம்பட்

மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள காற்றாலை திட்டத்திற்கு எதிராகவும், மக்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்தும் மன்னாரில் இன்று திங்கட்கிழமை (29) முன்னெடுக்கப்படவுள்ள பொது முடக்கம் போராட்டத்திற்கு அனைத்து தரப்பினரும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.மாக்கஸ் அடிகளார் கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னாரில் 57ஆவது நாளாகப் போராட்டம் ஞாயிற்றுக்கிழமை (28) அன்று இடம்பெற்று வரும் நிலையில், அங்கு இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# LGBTIQ சுற்றுலா மேம்பாட்டுக்கு எதிர்ப்பு



மூன்றாம் பாலினத்தவர்களை LGBTIQ-ஐ மையமாகக் கொண்ட சுற்றுலாவை ஊக்குவிக்கும் அரசாங்கத்தின் முடிவுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்

பாலின அடையாளம் அல்லது பாலியல் நோக்குநிலை பிரச்சினைகளை முன்னிலைப்படுத்தாமல், நாட்டின் இயற்கை அழகு மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை வைத்துக்கொண்டு சுற்றுலாப்பயணிகளை ஈர்க்க போதுமானது என்றும் கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# கரூரில் குரூரம்

அப்போது, அவரது வாகனத்தைப் பின்தொடர்ந்து ஏராளமானவர்கள் வந்ததாலும், ஏற்கெனவே பிரசாரம் நடைபெறும் இடத்தில் ஏராளமானோர் திரண்டிருந்ததாலும் அங்கு மிகுந்த கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இதற்கு மத்தியில் விஜய் அந்த பிரசார கூட்டத்தில் பேசினார். தொடர்ந்து ஏற்பட்ட கூட்ட நெரிசல் காரணமாக அந்த பகுதியின் அருகே உள்ள கடையின் முன்பகுதியில் ஆஸ்பெஸ்டாஸ் சீட், தென்னங்கீற்றுகள் கொண்டு அமைக்கப்பட்டிருந்த மேற்கூரைகள் சரிந்து விழுந்தன. இதில் அங்கு நின்று கொண்டிருந்த சிலர் காயமடைந்தனர்.

அதேநேரத்தில், கூட்டநெரிசலின் காரணமாக ஏராளமானவர்கள் மயங்கி விழுந்தனர். இதில் பெரும்பாலானவர்கள் சுமார் 6 வயது முதல் 12 வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள், சிறுமிகள் ஆவார்கள். இதையடுத்து மயக்கம் ஏற்பட்ட சுமார் 50-க்கும் மேற்பட்டவர்களை உறவினர்கள் மற்றும் அருகில் இருந்தவர்கள் மீட்டு, தனித்தனியாக அருகில் இருந்த தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.

அவர்கள் சுமார் 30க்கும் மேற்பட்ட அம்பியூலன்ஸுகள் மூலம் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். மயக்கமடைந்த சிறுவர்களை அவர்களது உறவினர்கள் கதறி அழுதவாறு தூக்கி வந்தது பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

இதையடுத்து கூட்டம் நடந்த இடம் அருகே பாதுகாப்புக்காக பொலிஸார் குவிக்கப்பட்டனர். அங்கு ஏராளமானவர்கள் திரண்டிருந்த நிலையில், அவர்களைக் கலைந்து செல்லுமாறு பொலிஸார் அறிவுறுத்தினர். ஆனால், அவர்கள் கலைந்து செல்லாததால், பொலிஸார் லேசான தடியடி நடத்தி, கூட்டத்தைக் கலைந்து போகச் செய்தனர்.

இதனால் அந்த இடம் கலவர பூமி போல் காட்சியளித்தது.சிறிது நேரத்திற்கு முன்பு கூட்டத்தினரின் ஆரவாரத்தாலும், உற்சாகத்தாலும் களைக்கட்டிய அந்த பகுதி, பின்னர் சோக மயமாக மாறியது. இதற்கிடையே கூட்ட நெரிசலில் சிக்கி சுமார் 10-க்கும் மேற்பட்ட சிறுவர்கள், சிறுமிகள் மாயமானார்கள். விழா ஏற்பாட்டாளர்கள் ஒலிபெருக்கி மூலம் அறிவித்து, சிறுவர், சிறுமிகளை மீட்டு, அவர்களது பெற்றோர்களை அழைத்து, அவர்களிடம் ஒப்படைத்தனர்.

இதையடுத்து தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களுக்கு முதலுதவி அளிக்கப்பட்டு, பின்னர் மேல்சிகிச்சைக்காக அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதில் பலர் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருந்ததாக கூறப்படுகிறது. அவர்களுக்கு மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதற்கிடையே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களில் முதற்கட்ட தகவல் படி 39 பேர் பலியாகி இருந்தனர். இந்நிலையில், சிகிச்சை பெற்று வந்த மற்றொரு நபர் உயிரிழந்ததால், பலி எண்ணிக்கை 40 ஆக அதிகரித்துள்ளது. இதில், 10 பேர் குழந்தைகள், 17 பேர் பெண்கள், 13 பேர் ஆண்கள் ஆவர்.

கூட்ட நெரிசலில் சிக்கியவர்களை ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்வதற்காக, சம்பவ இடத்துக்கு ஏராளமான அம்பியூலன்ஸுகள் வந்தன. அவற்றில் இருந்து வந்த சைரன் ஒலிகள் போர்க்கால காட்சியைப்போல் இருந்தது. சம்பவ இடத்தில் ஏராளமான செருப்புகள் சிதறிக்கிடந்தன. அந்த இடமே போர்க்களமாகக் காட்சியளித்தது.

கரூர் அரசு மருத்துவமனை மற்றும் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவக்குழுவானர் தீவிர சிகிச்சை அளித்து வருகிறார்கள். இந்தநிலையில் கரூரில் பிரசாரத்தை முடித்துக் கொண்டு நடிகர் விஜய் சனிக்கிழமை (28) இரவு 9 மணி அளவில் திருச்சி விமானநிலையத்தில் இருந்து சென்னை செல்வார் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இருந்தது.

கரூரில் நடந்த துயர சம்பவம் குறித்து நடிகர் விஜய்யின் கருத்தை அறிவதற்காகத் திருச்சி விமானநிலையம் முன்பு ஏராளமான பத்திரிக்கையாளர்கள் திரண்டு இருந்தனர். விஜய் பத்திரிகையாளர்களிடம் பேசுவார் என விமானநிலையத்தில் தயார் நிலையில் காத்திருந்தனர். ஆனால் இரவு 10 மணி அளவில் விமானநிலையம் வந்த நடிகர் விஜய் பத்திரிகையாளர்களைத் தவிர்த்து எந்த கருத்தும் கூறாமல் விமானத்தில் சென்னை புறப்பட்டார்.

### நட்டஈடு

இறந்தவர்களின் குடும்பங்களுக்கு பல இலட்சம் ரூபாய் நட்டஈடு தொகை அறிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், த.வெ.க 20 இலட்சம் ரூபாயும்,

தமிழக அரசு 10 இலட்சம் ரூபாயும், மோடி அரசு 02 இலட்சம் ரூபாயும் அறிவித்துள்ளது. அத்துடன், காயமடைந்தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் நிவாரண தொகையை அதிகரித்துள்ளது.

### வழக்கு

தவெக பிரச்சாரக் கூட்டத்தில் 39 பேர் உயிரிழந்தது தொடர்பாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் உள்ளிட்ட 3 பேர் மீது 5 பிரிவுகளின் கீழ் கரூர் நகர பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

### த.வெ.க. தலைவர் விஜய்யை கைது செய்ய வாய்ப்பு

இந்த சம்பவத்தை அடுத்து விஜய்யும் கைது செய்யப்படலாம் எனக் கூறப்படுகிறது. முன்னதாக த.வெ.க. பிரசார கூட்டத்தில் ஏதேனும் அசம்பாவிதங்கள் ஏற்பட்டால், கட்சித் தலைவரே பொறுப்பு என உயர்நீதிமன்றத்துக் கூறியிருந்தது. இந்தநிலையில் தான் கரூரில் நடைபெற்ற த.வெ.க. பிரசாரத்தில் கூட்ட நெரிசலில் சிக்கி சுமார் 40பேர் பலியான சோக சம்பவம் நிகழ்ந்துள்ளது. இதனால் விஜய் உள்பட நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்து, விஜய் கைது செய்ய வாய்ப்பு இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தியாவில் இதற்கு முன்பு மத நிகழ்ச்சிகளில் ஏற்பட்ட நெரிசலில் தான் உயிரிழப்பு சம்பவங்கள் அதிகளவில் நடந்து இருக்கிறது. ஆனால் ஒரு அரசியல் கட்சி கூட்டத்தில் இவ்வளவு பேர் பலியாகி இருப்பது இதுவே முதல் முறையாகும். ஏற்கனவே ஆந்திராவில் கடந்த 2022ஆம் ஆண்டு நெல்லூர் கண்டுகூரில் தெலுங்கு தேசம் கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் 8 பேர் பலியாகி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# LGBTIQ சுற்றுலா மேம்பாட்டுக்கு எதிர்ப்பு

மேலும் அவர் கூறியுள்ளதாவது, “பாலின அடையாளம் அல்லது பாலியல் நோக்குநிலை பிரச்சினைகளை நாம் அடிப்படையாகக் கொள்ளக்கூடாது. நமது வளமான மற்றும் உண்மையான பாரம்பரியம், பாலின விருப்பங்களைப் பொருட்படுத்தாமல், உலகம் முழுவதிலுமிருந்து சுற்றுலாப்பயணிகளை ஈர்க்க போதுமானது.

இந்த முயற்சியை மறுபரிசீலனை செய்ய வேண்டும், இதுபோன்ற உணர்திறன் வாய்ந்த விஷயங்களை அதிக பொறுப்புடன் அணுகுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகிறேன், ஏனெனில், இலங்கை அதன் இயற்கைக்காட்சி, கலாசாரம் மற்றும் மரபுகள் காரணமாக நீண்ட காலமாக ஒரு பிரபலமான இடமாக இருந்து வருகிறது என்பதே ஆகும்.

அத்துடன், பார்வையாளர்களை ஈர்க்க பாலின அடையாளத்தில் கவனம் செலுத்த வேண்டிய அவசியமில்லை என்றும் அவர் கூறினார்.

உரிமைகள் அமைப்பான Equal Ground உடன் இணைந்து LGBTIQ பயணத்தை ஊக்குவிக்க இந்த மாத தொடக்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை சுற்றுலா திட்டம் குறித்த கருத்துக்கு மத்தியில் நாமல் ராஜபக்ஷவும் கருத்து தெரிவித்துள்ளார்.

முன்னாள் சுகாதார அமைச்சர் டாக்டர் சன்ன ஜெயசுமன மற்றும் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ராமநாதன் அர்ச்சுனா ஆகியோரும், கலாசார மற்றும் பொது சுகாதாரக் கவலைகளைக் காரணம் காட்டி, இந்தத் திட்டத்தை இடைநிறுத்துமாறு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மன்னாரில் இன்று பொது முடக்கம்

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டம் முழுவதும் இன்று திங்கட்கிழமை (29) பொது முடக்கலுக்கு அழைப்பு விடுக்கின்றோம். அனைத்து செயல்பாடுகளும் முழுமையாக நிறுத்தி ஒத்துழைப்பு வழங்க வேண்டும். எமது போராட்டத்திற்கு வலு சேர்க்கும் வகையில் பொதுப் போக்குவரத்துகள் அனைத்தையும் நிறுத்தி,வர்த்தக நிலையங்களை மூடி மாவட்டத்தை ஸ்தம்பிதம் அடையச் செய்து எமது போராட்டத்திற்கு வலு சேர்க்க வேண்டுகோள் விடுக்கின்றோம்.

அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் கடமையாற்றுகின்றவர்கள் கடமைகளுக்குச் செல்லாது எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

திங்கட்கிழமை (29) காலை 10 மணிக்கு மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இருந்து கண்டன பேரணி ஆரம்பமாகும்.குறித்த பேரணி மன்னார் பஜார் பகுதியை வந்தடையும்.பின்னர் அங்கு எதிர்ப்பு கோஷங்கள் எழுப்பப்படும்.

குறித்த போராட்டம் மதியம் 1.30 மணி வரை முன்னெடுக்கப்படும். போராட்டத்தின் இறுதியில் எமது கோரிக்கை அடங்கிய மகஜர் ஜனாதிபதிக்குக் கையளிக்கும் வகையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்குக் கையளிக்கப்படும்.

எனவே, மாவட்ட ரீதியாக முன்னெடுக்கப்படும் எமது உரிமைக்கான போராட்டத்தில் மீனவர்கள், வர்த்தகர்கள், பொது போக்குவரத்து சேவையை முன்னெடுப்போர், உள்ளடங்களாக அனைத்து தரப்பினரும் கலந்து கொண்டு பூரண ஆதரவை வழங்க வேண்டும் என்றும் அழைப்பு விடுத்தார்.

# 8 மாதங்களில் 105 பேர் தங்கள் உயிரை மாய்த்தனர்

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த சிறுமியின் தந்தையார் வெளிநாட்டில் வேலை செய்துவரும் நிலையில் தாயுடன் சிறுமியும் அவரது இரட்டை சகோதரியும் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில், வெளிநாட்டில் இருந்து தந்தையார் இரட்டை சகோதரிகளுக்கு ஆடைகள் வாங்குவதற்குப் பணம் அனுப்பியுள்ளார். இந்த நிலையில், அடுத்த மாதம் நாட்டுக்குத் திரும்பி வந்ததும் குறித்த சிறுமிக்கு ஆடைகள் வாங்குவதற்குப் பணம் தருவதாகத் தந்தையார் கூறியுள்ளார்.

இதனையடுத்து, தனக்கு ஆடைகள் வாங்கத் தந்தை பணம் தரவில்லை என கோபமடைந்த சிறுமி சம்பவ தினமான சனிக்கிழமை (28) மாலை 5.45 மணியளவில் வீட்டில் தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

இதனைக் கண்டு உறவினர்கள் அவரை மீட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளதாகவும் அவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, தங்கள் உயிர்களை மாய்த்துக்கொள்பவர்களின் பட்டியலில் மட்டக்களப்பு மாவட்டம் இரண்டாவதாக இருக்கிறது. 2024ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் டிசம்பர் 31ஆம் திகதி வரை 48 பெண்கள் உட்பட 172 பேர் தங்கள் உயிர்களை மாய்த்துக்கொண்டுள்ளனர்.

2005 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஒகஸ்ட் 31ஆம் திகதி வரை 12 வயது சிறுவன் ஒருவர், 26 பெண்கள் உட்பட 105 பேர் கடந்த 8 மாதங்களில் தங்கள் உயிர்களை மாய்த்துக்கொண்டுள்ளனர். என பொலிஸாரின் மாவட்ட தரவுகள் மூலம் தெரியவந்துள்ளது.

# மஹிந்தவை சந்தித்து நன்றி சொன்ன ரணில்

கடந்த மாதம் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டபோது வழங்கப்பட்ட ஆதரவுக்கு விக்ரமசிங்க, ராஜபக்ஷவுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

தனிப்பட்ட பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்த ரணில் விக்ரமசிங்க, திரும்பி வரும் வழியில், மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துள்ளார் என முன்னாள் ஜனாதிபதியின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

# பாண் துண்டில்...

தோல் துண்டுடன் மாசுபட்ட பாண் துண்டை ஹட்டன்- டிக்கோயா நகராட்சி மன்றத்தின் பொதுச் சுகாதார ஆய்வாளர்களிடம் (PHI) ஒப்படைத்துள்ளார்.

ஆதாரங்களை ஆராய்ந்த பின்னர், PHI கள், பேக்கரி உரிமையாளருக்கு ஹட்டன் நீதிவான் நீதிமன்றத்தில் பல முறை ஏற்கனவே அபராதம் விதிக்கப்பட்டு, வளாகத்தைச் சுகாதாரமற்ற நிலையில் பராமரித்ததற்காக வழக்குத் தொடரப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்த சமீபத்திய சம்பவம் தொடர்பாக பேக்கரி உரிமையாளருக்கு எதிராகப் பல புதிய வழக்குகளைத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

# “அர்ஜூன மகேந்திரன் எங்களுக்கு வேண்டும்”



அர்ஜூன மகேந்திரன் தனது பெயரை மாற்றிக்கொண்டு அங்கு சிங்கப்பூரராக வசித்து வருவதாகவும், அந்த நாட்டின் சட்டங்களும் விதிமுறைகளும் அவரைக் கைது செய்வதற்குத் தடையாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

# ‘பொடி மெனிக்கே’ எஞ்சினில் சிக்கிய பெண்



பதுளையில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த ‘பொடி மெனிக்கே’ ரயிலில் மோதிய ஒரு பெண், அதன் எஞ்சினுக்குள் சிக்கி இருந்த நிலையில், அருகிலுள்ள கரேஜில் பணிபுரிந்த தொழிலாளர்களால் மீட்கப்பட்டு டிக்கோயா-கிளங்கன் ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஹட்டன் ரயில் நிலையத்திற்கு அருகில், ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியில் உள்ள ரயில் கடவைக்கு அருகில் இந்த விபத்து நிகழ்ந்தது.

பொடி மெனிக்கே ரயில் மெதுவாக, பயணித்ததாகவும்,குறித்த பெண் நீண்ட நேரம் ரயில் பாதைக்கு அருகில் இருந்ததாகவும் கரேஜ் ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

# மாணவனை தாக்கிய முன்னாள் பீ.சி கைது

பாடசாலைக்குள் நுழைந்து 9 வயதுடைய பாடசாலை மாணவனை தாக்கினார் என்ற குற்றச்சாட்டின்பேரில் முன்னாள் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட கான்ஸ்டபிள் இடைநீக்கம் செய்யப்பட்டவர் என தெரியவந்துள்ளதுடன், தாக்கப்பட்ட மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான கான்ஸ்டபிளின் மகளும், தாக்கப்பட்ட மாணவனும் ஒரே வகுப்பில் படித்து வருகின்றதுடன், நண்பர்கள் இணைந்து விளையாடிக் கொண்டிருந்தபோது, மாணவி தள்ளப்பட்டு தரையில் விழுந்து, அவளது முன் பற்களில் ஒரு பகுதி உடைந்துள்ளது.

இதனால் கோபமடைந்த சந்தேக நபர், வகுப்பறைக்குள் நுழைந்து மாணவனைத் தாக்கியுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பந்தப்பட்ட முறைப்பாடு தொடர்பாக வகுப்பு ஆசிரியரிடமிருந்து வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# நான்காவது நாளாக தொடரும் உண்ணாவிரத ஆர்ப்பாட்டம்



“இலங்கையின் உள்நாட்டு பொறிமுறையை நிராகரிக்கின்றோம் மற்றும் தமிழின அழிப்பு வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் மற்றும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித புதை குழிகள் குறித்து நாம் சர்வதேச சுயாதீன விசாரணை மட்டுமே கூறுகின்றோம்” எனும் தொனிப்பொருளில் செம்மணியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட, சுழற்சி முறையில் நடை பெற்று வரும் உண்ணாவிரத போராட்டம் ஞாயிற்றுக்கிழமை (28) அன்று நான்காவது நாளாக நடைபெற்றது.

இந்த உண்ணாவிரத ஆர்ப்பாட்டத்தில் மன்னார் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், பொது மக்கள், இளைஞர்கள், மக்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

குறித்த சுழற்சி முறையிலான உண்ணாவிரத ஆர்ப்பாட்டமானது எதிர் வரும் முதலாம் திகதி வரை மாவட்ட ரீதியில் தொடர்ந்து இடம் பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின்

# 30ஆவது ஆண்டு நிறைவு விழா

■ எம்.நசார்

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் 30ஆவது ஆண்டு நிறைவும் கொழும்பு, மருதானை விஜயவர்தன மாவத்தையில் அமைந்துள்ள பிரதான தபாலக கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை(27) காலை நடைபெற்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என். எம். அமீன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சுகாதார மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான டாக்டர் நலிந்த ஜயதிஸ்ஸ பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டார்.

விசேட அதிதிகளாக தமிழ்நாடு மாநில ஹஜ் குழு தலைவரும் மனிதநேய மக்கள் கட்சி பொதுச் செயலாளருமான பி.அப்துல் சமத்(எம்.எல்.ஏ.) மற்றும் சிங்கப்பூர் ரோயல் கிங் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி எஸ்.எஸ்.சிராஜுதீனின் நிதி உதவியில் ஊடகவியலாளர் 20 பேருக்கு நிதியுதவி வழங்கப்பட்டது.

இந்திய தமிழ்நாடு பேராசிரியர் எம்.எச்.வாஹிருல்லா(எம்எல்ஏ) எழுதிய 'நபிதுமாகே சமாஜா சபண்டத' சிங்கள மொழிபெயர்ப்பு நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது. (செயின் பாசில் இதனை சிங்களத்தில் மொழி பெயர்ப்பு செய்திருந்தார்.) இதன்போது, தென்கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா வாழ்நாள் சாதனையாளராக கௌரவிக்கப்பட்டார்.

சன்டே ஒப்சவர் முன்னாள் ஆசிரியர் லக்ஸ்மன் குணசேகர, தினகரன் முன்னாள் ஆசிரியர் கே.குணராசா, சிரேஷ்ட ஊடகவியலாளர்களான நிலார் என்.காசிம், எம்.ஜே.எம்.தாஜுதீன், எம்.எஸ்.எம்.மஸாஹிம், ரஷீத் எம்.இம்தியாஸ், எம்.கே.எம்.அஸ்வர், பி.எம்.முக்தார், ஜெஸ்மி எம் மூஸா, எச்.எம்.கலால்தீன், எஸ்.எம்.எம்.ஜவாத், எம்.எப்.பாத்திமா றிஸ்வானா ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த மாநாட்டின்போது, ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவராக விடிவெள்ளி பத்திரிகையின் ஆசிரியர் எம்.பி.எம்.பைரூஸ், புதிய செயலாளராக ஷம்ஸ் பாஹிம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன், நடப்பு ஆண்டுக்கான புதிய நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.















காற்றாலைக்கு எதிராக

# கட்டைக்காட்டில் ஆர்ப்பாட்டம்

■ பூ.லின்ரன்

மன்னார் காற்றாலை திட்டத்தை எதிர்த்து உள்ளூர் மக்கள் எழுப்பிய சமாதானமான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீதும் வணக்கத்திற்குரிய பங்கு தந்தையர்கள் மீதும் காவல்துறை மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்து வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் அமைதி வழி ஆர்ப்பாட்டமொன்று ஞாயிற்றுக்கிழமை (28) அன்று முன்னெடுக்கப்பட்டது

மன்னார் மக்களுக்குப் பாதிப்பாக அமையக்கூடிய காற்றாலை திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து மன்னாரில் ஆர்ப்பாட்டம் தீவிரம் அடைந்து வரும் நிலையில், அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் மீது அரசு அடக்குமுறை பயன்படுத்தப்படுகிறது



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் மக்கள் மீதும், அருட் தந்தையர்கள் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்படுவதைக் கண்டித்தும் மன்னார் மக்களின் ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவளிக்கும் முகமாகவும் வடமராட்சி கிழக்கு கட்டை காட்டில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கட்டைக்காடு பொதுமக்களின் ஒழுங்குபடுத்தலில் கட்டைக்காடு பங்கு தந்தை தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (28) 7.30 மணி அளவில் குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## வாகன விபத்தில் இளைஞன் பலி

மாலபே, தலாஹேன பகுதியில், இரண்டு இளைஞர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள், காரொன்றுடன் மோதியதில், ஒருவர் உயிரிழந்து மற்றொருவர் படுகாயமடைந்துள்ளதாக தலங்கம பொலிஸார் தெரிவித்தனர்

பத்தரமுல்ல, ஸ்ரீ சுபூதிபுர கெமுனு வீதியைச் சேர்ந்த 21 வயதுடைய ஓமிது பபசர டி சில்வா என்பவரே உயிரிழந்துள்ளார்.


இளைஞர்கள் இருவரும் மாலபேயிலிருந்து பத்தரமுல்ல நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது, எதிர் திசையில் வந்த கார் மீது மோதியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த இளைஞனின் தவறால் இந்த விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் படுகாயமடைந்த மற்றைய இளைஞன் முல்லேரியாவ பகுதியைச் சேர்ந்த 24 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

## சொகுசு கார் யானையுடன் மோதி விபத்து

■ பாறுக் ஷிஹான்



காத்தான்குடியில் இருந்து பொத்துவில் நோக்கி பயணித்த சொகுசு கார் ஒன்று சனிக்கிழமை(27) இரவு 7 மணியளவில் யானையுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது, பொத்துவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொத்துவில் ஊறணி காட்டுப்பகுதியில் யானையுடன் மோதுண்டு குறித்த கார் பலத்த சேதமடைந்ததுடன் அதில் பயணித்த குடும்பம் தெய்வாதீனமாகக் காயங்கள் ஏதுவுமின்றி தப்பியுள்ளனர்.

மேலும் குறித்த பகுதிகளில் பிரதான வீதியில் இரவு மற்றும் மாலை மற்றும் இரவு நேரங்களில் யானைகளின் நடமாட்டம் அதிகமாகக் காணப்படுவதாகப் பயணிகள் தெரிவித்துள்ளனர்.

நீதிமன்ற மலசலகூடத்தில் இருந்து

## சிறைக் கைதி சடலமாக மீட்பு

மட்டக்களப்பு- ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்ற மலசலகூடத்தில் சிறைக் கைதி ஒருவர் தன் உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் வெள்ளிக்கிழமை (26) அன்று இடம்பெற்றுள்ளது.

ஏறாவூர், மிச்நகர் பிரதேசத்தைச் சேர்ந்த 40 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

போதைப்பொருள் தன் வசம் வைத்திருந்தமை மற்றும் களவு தொடர்பாக ஏழு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த குறித்த நபர் வெள்ளிக்கிழமை (26) அன்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டிருந்தார்.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட வழக்குகளின் பிரகாரம் குறித்த நபரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், சிறைச்சாலை மலசலகூடத்திற்குச் சென்ற நபர், அங்கு தன் உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

மலசலக் கூடத்திற்குச் சென்ற மற்றொரு நபர், சடலத்தைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து மட்டக்களப்பு மாவட்ட தடயவியல் பொலிஸார் நீதிமன்றிற்கு வருகை தந்தவுடன் தடயங்களைச் சேகரித்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட சட்ட வைத்தியதிகாரி சடலத்தைப் பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்றத்தின் பதில் நீதிபதி வீ.தியாகேஸ்வரன் சம்பவ இடத்தை நேரடியாகப் பார்வையிட்டு விசாரணைகளை ஆரம்பித்தார். இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.



# மீண்டுமொரு கரூர் குரூரத்துக்கு வழி சமைக்காதீர்

இந்தியாவில் அவ்வப்போது இடம்பெறும் சம்பவங்கள் உலகையே ஒரு நிமிடம் திரும்பிப் பார்க்க வைத்துவிடும். அவ்வாறுதான் கரூர் சம்பவமும் திரும்பிப் பார்க்கவைத்துள்ளது. கரூரில் அரசியல் கூட்டமொன்றின் சனநெரிசலில் சிக்கி 40 பேர் துடிதுடித்து உயிரிழந்துள்ளனர். அத்துடன், 50க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தமிழக வெற்றிக் கழக (த.வெ.க) தலைவரும், நடிகருமான விஜய், வாரம்தோறும் சனிக்கிழமையன்று பிரசார கூட்டங்களை நடத்தி வருகிறார். கரூர் வேலுச்சாமிபுரத்தில் சனிக்கிழமை (27) நடத்திய அரசியல் கூட்டத்திலேயே இவ்வனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

இந்த நெரிசலில் சிக்கி மரணமடைந்தவர்களில் 10 பேர் குழந்தைகள், 17 பேர் பெண்கள், 13 பேர் ஆண்கள் அடங்குகின்றனர். இந்த சம்பவத்தை அடுத்து பரஸ்பர குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. கூட்டத்துக்கு விஜய் நேரத்துக்கு வராமல், பலமணிநேரம் தாமதித்து வந்தமையால் இவ்வனர்த்தம் ஏற்பட்டதாக விஜய்க்கு எதிராகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

த.வெ.க இதற்கு முன்னர் நடத்திய அரசியல் கூட்டங்களுக்கும் தாமதித்தே வந்துள்ளார். ஆக, தங்களுடைய கூட்டத்துக்கு சனம் திரண்டு வந்துள்ளது என்பதைக் காண்பிக்கும் வகையிலேயே விஜய், தாதாகக் கூட்டங்களுக்கு வருகைதருகின்றார் என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்படுகின்றது.

கரூரில் பெரிய கூட்டத்தை நடத்துவதற்கான, இடங்களை ஒதுக்கித்தாராமையில் இவ்வனர்த்தம் ஏற்பட்டதாகவும், அனர்த்தம் ஏற்பட்ட ஒருசில நிமிடங்களுக்குள், ஆளும் தரப்பைச் சேர்ந்தவர்கள் வைத்தியசாலைக்குப் படையெடுத்தது எப்படி? உள்ளிட்ட சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன. எனினும், 40 அப்பாவி உயிர்கள் இழக்கப்பட்டுள்ளன.

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் ஒரு நடிகர், ஆகையால், அவரை நேருக்கு நேரப் பார்ப்பதற்காக வீடுகளில் குழந்தைகள் அடம் பிடித்திருக்கக் கூடும். அதனால், பெற்றோர்களுக்கு அழைத்து வந்திருக்கலாம். எனினும், இவ்வாறான நிலைமை ஏற்படுமென முன்கூட்டியே அறிந்திருந்தால், யார்தான், தங்களுடைய பிள்ளைகளை அழைத்துச் சென்றிருப்பார்களா?, இனிமேல் அழைத்தே செல்லமாட்டார்கள்.

கூட்ட நெரிசலில் சிக்கி பலரும் மரணமடைந்த சம்பவம் முதன்முறையாக நடைபெற்ற ஒன்றல்ல. எனினும், அரசியல் கூட்டமொன்றில் இவ்வளவு பெரும் எண்ணிக்கையானோர் மரணமடைந்தது கரூரிலேயே ஆகும். அதனால்தான், இவ்வளவாகப் பேசப்படுகின்றது. ஆந்திராவில் கடந்த 2022-ம் ஆண்டு நெல்லூர் கண்டுகூரில் தெலுங்குதேசம் கட்சி தலைவர் சந்திரபாபு நாயுடு கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் 8 பேர் பலியாகி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசியல் கூட்டமொன்றை நடத்துவதற்கு முன்னர், நன்கு திட்டமிடவேண்டும். கடந்த கூட்டத்தின் போது, பாரிய மின்கம்பமொன்று விழுந்து. தெய்வாதீனமான எவருக்கும் எவ்விதமான பாதிப்புகளும் ஏற்படவில்லை. எனினும், காரொன்று சேதமடைந்தது.

கரூரில் இடம்பெற்ற சம்பவத்துக்கு நீதி கிடைக்கவேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு, தமிழக அரசாங்கம், மத்திய அரசாங்கம், த.வெ.க அறிவித்துள்ளதைப்போல நட்டஈடுகள் வழங்கப்படவேண்டும். உரிய வகையிலான விசாரணைகளை நடத்தி, இந்த சம்பவத்துக்குக் காரணமானவர்களைச் சட்டத்தின் முன்னிறுத்தி நீதியை நிலைநாட்டவேண்டும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்

No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

பிரச்சினைகளிலிருந்து தப்பிக்க மௌனமும், ஒதுங்கி ஒளிவதும் சரிப்பிட்டுவராது. வீரமுடன் எதிர்கொண்டால் எல்லாம் சரிவர நிவர்த்தியாகிவிடும்.

ஆனால், பிரச்சினைகளுக்கு நீங்களே! காரணமாகி அதனைப் பிறர் மீது சாட்டுதல் செய்வது துரோகம். தேவையற்ற விதத்தில் உங்களை எவர் உட்படுத்தினால் அதனைக் கண்மூடிக் கொண்டிருப்பது ஏற்புடையதல்ல.

இதனால் தேவையற்ற குற்றச்சாட்டுகளை ஏற்பது போலாகிவிடும். இன்று குடும்பங்களுக்குள் தேவையற்ற தர்க்கங்களினால் அமைதி குலைந்து நிற்கிறது.

சின்ன விஷயங்களுக்கும் ஆவேசப்படுகின்றார்கள். குடும்ப விஷயங்கள், தவறான புரிதலினால் உருவாகின்றன. எனவே, அதனை உடன் நீங்கிவிடலாம். அவை பூதாகாரமான விடயம் என கருதலாகாது.

குடும்ப உறவு இறுக்கமானதாக இருக்கக் கோபங்களைக் களைவதுடன் குடும்ப அங்கத்தினரின் தேவைகளையும் புரிந்துகொள்ளவும் வேண்டும்.

பாசமிகு குடும்பத்தினர் எதனையும் ஒரு பொருட்டாகக் கருதுவதுமில்லை. ஒரு குடும்பம் பல குடும்பங்களுக்கு எடுத்துக்காட்டாகவேண்டும்.

– பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### ஆபத்தான கழிவுநீர் வடிகான்



அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட நற்பிட்டிமுனை பகுதியில் உள்ள கழிவு நீர் வடிகான் உரிய முறையில் மூடப்படாமை காரணமாக மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அண்மைக்காலமாக மாணவர்களின் பயன்பாட்டில் உள்ள நற்பிட்டிமுனை -03 ஆலையடி வடக்கு வீதியில் உள்ள குறித்த வடிகானில் மூடி இன்மை காரணமாக அப்பகுதியில் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

மேலும் இவ் வடிகான்கள் தொடர்பில் உரிய தரப்பினருக்கு அறிவித்தும் எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மாணவர்களின் நிலைமை அறிந்து குறித்த வடிகானின் மூடிகளை நிர்மாணித்து உதவுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

- பாறுக் ஷிஹான்

# நோக்கம் திசை மாறாமல் இருக்கட்டும்

**லக்ஸ்மன்**

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 80ஆவது அமர்வில் கடந்த 25ஆம் திகதி உரையாற்றிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, தன்னுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தை உலகத் தலைவர்களுக்கு ஒப்புவித்ததாகவே நோக்க முடிகிறது.

இலங்கையில் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை.போதைப்பொருள் பிரச்சினையும், ஊழல், பொருளாதாரப் பிரச்சினைகளே இருக்கிறது. வேறு ஒன்றுமில்லை. அதற்காக அனைத்து நாடுகளும் ஒத்துழையுங்கள், ஐக்கிய நாடுகள் சபை ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதுபோன்ற தொனியில் தன்னுடைய உரையினை நிகழ்த்திவிட்டு, ஜப்பானுக்குப் பயணமாகியிருக்கிறார். அங்கு ஜப்பானின் ஒசாகாவில் நடைபெறுகின்ற 'எக்ஸ்போ 2025' கண்காட்சியில் பங்கேற்றார். ஜப்பான் விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பினார்.

ஜனாதிபதியின் இந்த உரையானது மக்கள் மத்தியில், குறிப்பாக, தமிழ் மக்கள் மத்தியில் ஒரு கவலையான சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறது. நோக்கம், திசைமாறுதல் என்பது சாதாரணமானதுதான், ஆனால், நம்பிக்கை கொண்டவர்களின் நோக்கம் திசை மாறுவது கவலையானது. இலங்கையில் தமிழ் மக்களின் நோக்கம் ஒரு இடது சாரிச் சிந்தனையுள்ள அரசாங்கமானது நீண்டகாலமாக இருந்து வருகின்ற தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் தீர்வினை வழங்கும் என்றே நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆனால், நடப்பதென்னவோ பழையதைப் போலவே இருப்பது அவர்களுக்கு ஏமாற்றமாகவே அமைந்திருக்கிறது.

ஒவ்வொரு வருடத்திலும் ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் அமர்வுகள் ஆரம்பமாகின்ற வேளைகளில், தமிழ் மக்கள் தம்முடைய எதிர்பார்ப்புகள் நிறைவேறுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுவிட்டதாகவே நினைத்துக் கொள்வர். ஆனால், அது நிறைவுக்கு வருகையில் ஏமாற்றமாகிப்போவதே வழமையானது. இம்முறை நடைபெறுகின்ற 60ஆவது கூட்டத் தொடரிலும்கூட பொறுப்புக்கூறலின் அவசியமும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வின் அவசரமும் வலியுறுத்தப்பட்டுக் கொண்டிருந்தாலும், ஏதுமற்று நிறைவுக்கு வரும்.

இலங்கைத் தமிழர்களின் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வின் அவசியம் தொடர்ந்தும் வலியுறுத்தப்படுகிறது. வடக்கு, கிழக்கு தமிழ் மக்களுக்கான விரிவான அதிகாரப் பகிர்வுடன் கூடிய புதிய சமஷ்டி அரசியலமைப்பை உருவாக்குவதற்கு இலங்கையைத் தொடர்ந்து வற்புறுத்துமாறும், உடனடி நடவடிக்கையாக மாகாண சபைத் தேர்தல்களை எந்தத் தாமதமும் இன்றி நடத்துவதற்குரிய அழுத்தங்களைப் பிரயோகிக்குமாறும் தமிழர் தரப்பு, சர்வதேசத்தையும் ஐக்கிய நாடுகள் சபையையும் கோரி வருகிறது. இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லும் வகையில், ரோம் சாசனத்தில் கையொப்பமிடுவதற்கு அழுத்தம் கொடுக்கப்படுகிறது.

பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தின் நோக்கத்தை விரிவுபடுத்தி போர்க் குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள், சர்வதேச மனித உரிமைகள் சட்ட மீறல்கள் போன்றவற்றைத் தவிர இனப்படுகொலை, இனப் படுகொலைக்கான நோக்கம் ஆகியவற்றினைக் குறிக்கும் ஆதாரங்களைக் குறிப்பாக சேகரிக்க வேண்டும். இலங்கை பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தில் இந்த ஆதார சேகரிப்பு முக்கியமான விடயமாகும். இந்தச் செயற்றிட்டத்தை விரைவில் முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று பல கடிதங்கள் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைப் பேரவை அமர்வு ஆரம்பமாவதற்கு முன்னர் அனுப்பப்பட்டன.

இலங்கையில் நடைபெற்ற யுத்தத்தின் போது மனித உரிமை மீறல்கள் மற்றும் யுத்தக் குற்றங்கள் நடைபெற்றன. இவை தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்தும் இருந்து கொண்டே இருக்கிறது. இந்த நிலையில், ஒவ்வொரு மனித உரிமைப் போரவையிலும் கொண்டுவரப்படும் பிரேரணைகளும் நிறைவேற்றப்படும் தீர்மானங்களும் காணாமல் போகின்றன. இம்முறையிலும் முன்வைக்கப்பட்ட தீர்மானம் இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்றவகையில் மாற்றியமைக்கப்படுகின்றது.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் கொண்டுவரப்பட்ட 30-1 பிரேரணைக்கு அன்றைய வெளிவிவகார அமைச்சரான மங்கள சமரவீரவின் முன்மொழிவுடன் இலங்கை இணை அனுசரணை வழங்கியது. அதிலிருந்து தொடங்கப்பட்ட பொறுப்புக்கூறல் விவகாரம் இன்னமும் நிறைவுக்கு வரவில்லை.

ஆனால், காலம் கடத்தல் மாத்திரம் தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது. இலங்கையின் பொறுப்புக்கூறல் விடயத்தில் ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் செயற்பாட்டின் அவசியத்தை தமிழர் தரப்பு வலியுறுத்திக்கொண்டே இருக்கிறது.

ஆனால் நடைபெறுவது ஒன்றுமில்லை என்றே ஆகிப்போகின்றது. மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது பொறுப்புக்கூறல் விடயத்தில் இன்னமும் அக்கறையற்ற போக்கையே கடைப்பிடித்து வருகின்றது.

> **இது நாட்டில் மக்களாட்சி உறுதிப்படுத்தப்படும் என்று கூறிக்கொண்டு ஆட்சி பீடமேறிய இன்றைய அரசாங்கம் மக்களின் ஜனநாயக உரிமைகளை ஆயுதப்படைகளைக் கொண்டு அடக்க முனைவது "இவர்களும் அவர்கள்" தானா என்று கேட்கத் தோன்றுகின்றது என்கிற விமர்சனத்தைக் கொண்டு வந்திருக்கிறது**

இந்தப் போக்கானது முன்னைய அரசாங்கங்களின் செயற்பாட்டைப் போன்றதாகவே இருக்கிறது, பொறுப்புக்கூறல் விடயத்தில் இந்த அரசாங்கம் பொறுப்பாக நடந்து கொள்ளும் என்றே தமிழ் மக்கள் எதிர்பார்த்திருந்தனர். அந்த எதிர்பார்ப்புடனேயே ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் ஆகியவற்றில் தமிழ் மக்கள் வாக்களித்திருந்தனர்.

இனப்பிரச்சினைக்கு புதிய அரசியலமைப்பினூடாக தீர்வு முன்வைக்கப்படும் என தேசிய மக்கள் சக்தி உறுதி வழங்கியிருந்த போதும் இன்னமும் பொறுப்புக்கூறல் விடயத்திலோ அல்லது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு விவகாரத்திலோ உரிய அக்கறை காண்பிக்கப்படவில்லை. இருந்தாலும் பரவாயில்லை, என்றிருந்த தமிழ் மக்கள் ஜனாதிபதியின் ஐக்கிய நாடுகள் சபை உரையுடன் முழுவதுமாக ஏமாந்திருப்பர் என்றே கூறலாம்.

ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றுவதற்குப் பயணமாவதற்கு முன்னர் மன்னார் காற்றாலை மின் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அறிவிப்பை வழங்கிவிட்டுச் சென்றிருக்கிறார்.

அதன் எதிரொலியாக, வெள்ளிக்கிழமை அந்த திட்டத்திற்கெதிராகப் போராடியவர்கள் மீது படைத்தரப்பு தாக்குதல் நடத்தியிருக்கிறது.

இது நாட்டில் மக்களாட்சி உறுதிப்படுத்தப்படும் என்று கூறிக்கொண்டு ஆட்சி பீடமேறிய இன்றைய அரசாங்கம் மக்களின் ஜனநாயக உரிமைகளை ஆயுதப்படைகளைக் கொண்டு அடக்க முனைவது "இவர்களும் அவர்கள்" தானா என்று கேட்கத் தோன்றுகின்றது என்கிற விமர்சனத்தைக் கொண்டு வந்திருக்கிறது.

இந்த நடவடிக்கை வன்மையான கண்டனங்களுக்கு உள்ளாகியிருக்கிறது. காற்றாலை செயற்திட்டத்திற்கெதிராக மக்கள் மேற்கொண்ட ஜனநாயக போராட்டத்தில் கலந்துகொண்டிருந்த பெண்கள், மத குருக்கள் உட்பட சகலரையும் பொலிஸார் அடித்துக் கலைத்தது காற்றாலை இயந்திர பாகங்களை ஏற்றிச்சென்ற கனரக வாகனங்களுக்கு வழியேற்படுத்திக் கொடுத்ததிருக்கின்றனர். மக்களின் உணர்வுகளை காவல்துறையினரின் 'பூட்ஸ்'களால் நசுக்கியிருக்கின்றமையானது பெரும் கவலையை ஏற்படுத்தியிருக்கிறது.

முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளை இல்லாமல் செய்கிறோம், பாராளுமன்ற உறுப்பினர்களின் வசதிகளைக் குறைக்கிறோம், நாட்டில் ஊழலை ஒழிக்கிறோம் போதைப்பொருளைக் கட்டுப்படுத்துகிறோம். நிலைபேறான அபிவிருத்திகளுக்கு முயற்சிக்கிறோம் என்று கூறிக்கொண்டு, அதே நேரத்தில், மக்களின் உரிமைகளை மறந்து செயற்படுவதானது ஒருபோதும் நற்போக்காக பார்க்கப்படாது.

கடந்தகால செயற்பாடுகள் தொடர்பான பொறுப்புக்கூறல் விடயத்தில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அக்கறையின்றிச் செயற்படுவது தொடர்பில் பல்வேறு தரப்புகளாலும் விமர்சனங்களை முன்வைக்கப்பட்டு வருகின்றன. மக்களால்

தங்களது நலன் சார்ந்து விடுக்கப்படும் கோரிக்கைகளுக்கு வழங்கப்படும் பதில்கள் அவர்களைத் திருப்திப்படுத்துவதாக இல்லை என்ற உணர்வு மேலோங்கி வருவதாகக் குற்றம் சாட்டப்படுகிறது. அதற்கேற்ற வகையிலேயே அரசாங்கத்தின் அடுத்த அடுத்த நடவடிக்கைகள் காணப்படுகின்றன.

இந்த இடத்தில்தான், பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளையும் உள்ளக் குமுறல்களையும் நன்கு அறிந்து செயற்படும் என்று எதிர்பார்க்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம்,

முன்னைய அரசாங்கங்களைப் போன்ற ஒரே குட்டையில் ஊறிய மட்டை என்பதான அபிப்பிராயத்துக்குள் அடக்கப்படும் நிலைமை நிலைப்பாடாக மாற்றமடையத் தொடங்கியிருக்கிறது.

இந்தத் தொடக்கம் அரசாங்கத்தின் மீதான எதிர்ப்பினை அதிகரிப்பதோடு, எதிர்மறையான சிந்தனைகளையும் உருவாக்கும் எனலாம். கடந்த கால அரசாங்கங்களின் செயற்பாடுகள் மீது வெறுப்புக்கொண்டிருந்த மக்கள், தேசிய மக்கள் சக்தியைக் கடந்த தேர்தல்களில் ஒரு மாற்றுச் சக்தியாகவே கருதினர்.

ஜனாதிபதித் தேர்தலைவிட, பாராளுமன்றத் தேர்தலில் பேராதரவு கிடைத்திருந்தது. இந்தப் பேராதரவைத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தங்களது ஆதிக்கப் பிரயோகத்துக்கான ஆணையாகக் கொள்வது தவறாகும்.

மொத்தத்தில், தங்களது நோக்கம் வேறாக இருந்தாலும் மக்களது நோக்கத்தினை சரியாகப் புரிந்து கொண்டு அவர்களது நோக்கத்தின் பாதையில் ஆட்சியின் நகர்த்தலை மேற்கொள்வதே சிறப்பானது என்பதனையே அவர்கள் அடையாளம்

கண்டுகொள்ள வேண்டும். இருந்தாலும், நோக்கம் திசைமாறாமலிருக்கட்டும் என்று எண்ணிக்கொள்வோம.

பின்தங்கிய கிராமிய சமூகத்தாரை மேம்படுத்த நற்குண முன்னேற்ற அமைப்புடன்

# JXG கைகோர்ப்பு





JXG (ஜனசக்தி குழுமம்), நற்குண முன்னேற்ற அமைப்புடன் கைகோர்த்து, மொனராகலை கிராமிய இதயத்துடிப்பு வலுவூட்டல் நிலையத்தினூடாக, பின்தங்கிய சமூகத்தாருக்கு நிலைத்திருக்கும் அபிவிருத்திப் பங்களிப்பை வழங்க முன்வந்துள்ளது.

நாட்டின் பின்தங்கிய பகுதிகளுக்கு கிராமிய இதயத்துடிப்பு வலுவூட்டல் நிலையங்களினூடான சென்றடைவை நற்குண முன்னேற்ற அமைப்பு மேற்கொண்டுள்ளதுடன், வசதி வாய்ப்புகள் குறைந்த சமூகங்களில் உயர் தரம் வாய்ந்த வசதி வாய்ப்புகள், திறன் விருத்தி மற்றும் பரந்த கல்வி வாய்ப்புகள் போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுக்கும் பலம் பொருந்திய மாதிரியாக இது அமைந்துள்ளது.

ஒவ்வொரு கிராமத்தினதும் முக்கியத்தும் வாய்ந்த நிலையமாக இவை அமைந்திருப்பதுடன், சுய-வலுவூட்டல், சமத்துவமின்மையை குறைத்தல் மற்றும் ஒட்டு மொத்த வாழிட நியமங்களை மேம்படுத்தல் போன்றவற்றுக்கு அவசியமான நிகழ்ச்சித் திட்டங்களை அணுகுவதற்கான வாய்ப்பையும் வழங்குகின்றன.

2025 ஜுன் மாதத்தில் மொனராகலை கிராமிய இதயத்துடிப்பு வலுவூட்டல் நிலையத்தினால், 1233 அனுகூலம் பெறுவோருக்கு ஆதரவளிக்கப்பட்டிருந்ததுடன், 282 புதிய பதிவுகளை உள்வாங்கியிருந்தது. 15 பாடவிதான-அடிப்படையிலான நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்து, இந்தத் திட்டத்தின் உடனடி தாக்கத்தை வெளிப்படுத்தியிருந்தது. அதனைத் தொடர்ந்து, 2025 ஜுலை மாதத்தில், 260 பதிவு செய்யப்பட்ட மாணவர்களை ஈடுபடுத்தியிருந்ததுடன், 15 பாடங்களில் 1168 கற்கைநெறி அனுகூலம் பெறுவோரை சென்றடைந்திருந்தது. மொத்தமாக 29 கிராமங்களின் 17 பாடசாலைகள் பயன் பெற்றிருந்தன. இதில் 87 ஆண் மற்றும் 170 பெண் பதிவு செய்யப்பட்ட மாணவர்களாக காணப்பட்டதுடன், கற்கைநெறி பங்கேற்பில் 423 ஆண் மற்றும் 745 பெண் பயிலுனர்களும் அடங்கியிருந்தனர். கணனி பயிற்சி, ஆங்கில மற்றும் தமிழ் மொழி, அடிப்படைக் கல்வி, ஆடை வடிவமைப்பு, சமையல், STEAM, புவிசார் சுகாதாரக் கல்வி, நற்குண விவசாயத் திட்டம், பாரம்பரிய இலங்கையின் நடனம், சிறுவர்களின் சிறந்த பெறுமதிகள் திட்டம், Stray Friendly நடவடிக்கை மற்றும் வயது முதிர்ந்தோருக்கான சிறந்த பராமரிப்பு போன்றன கிராமிய மக்களை மேம்படுத்தி வலுவூட்டுவதில் காண்பிக்கும் அர்ப்பணிப்பை பிரதிபலித்திருந்தது.

இந்தப் பங்காண்மை தொடர்பில் JXG (ஜனசக்தி குழுமம்) இன் முகாமைத்துவ பணிப்பாளர்/குழும பிரதம நிறைவேற்று அதிகாரி ரமேஷ் ஷாப்ட்டர் கருத்துத் தெரிவிக்கையில், “கிராமிய இதயத்துடிப்பு வலுவூட்டல் நிலையங்களினூடாக இலங்கையின் பின்தங்கிய கிராமிய சமூகத்தாரின் வாழ்வை மாற்றியமைக்கும் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக நற்குண முன்னேற்ற அமைப்புடன் இணைந்து செயலாற்றுவதையிட்டு நாம் பெருமை கொள்கிறோம். வாழ்வை மேம்படுத்தல் மற்றும் சமூகங்களுக்கு வலுவூட்டல் போன்றவற்றில் கவனம் செலுத்தும், JXG (ஜனசக்தி குழுமம்) இன் சமூக நலன்பேண பிரிவான ஜனசக்தி அறக்கட்டளையின் இயற்கையான நீடிப்பாக இந்தப் பங்காண்மை அமைந்துள்ளது. இலங்கையில் நிலைபேறான, அளவிடக்கூடிய மாற்றங்களை மேற்கொள்ளக்கூடிய கட்டமைப்புகளுக்கு ஆதரவளிப்பது எனும் எமது நம்பிக்கையை பிரதிபலிப்பதாக இந்தச் செயற்பாடு அமைந்துள்ளது. ஜனசக்தி அறக்கட்டளையினூடாக, நாம் சேவையாற்றும் சமூகங்களைச் சேர்ந்தவர்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதில் நாம் கவனம் செலுத்துகிறோம். தேசிய முன்னுரிமைகளில் எமது நோக்கினூடாக, தேசத்தில் வளர்ச்சியை பதிவு செய்ய எமக்கு உதவியுள்ளதுடன், காலப்போக்கில் சமூகங்களில் நேர்த்தியான தாக்கத்தை ஏற்படுத்தவும் முடிந்துள்ளது” என்றார்.

நற்குண முன்னேற்ற அமைப்பின் ஸ்தாபகர் மற்றும் பிரதம காப்பாளர் குஷில் குணசேகர கருத்துத் தெரிவிக்கையில், “நகர-கிராமிய பாகுபாட்டை இல்லாமல் செய்து, சமத்துவமான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பது நற்குண முன்னேற்ற அமைப்பைச் சேர்ந்த எமது நோக்காக அமைந்துள்ளது. மொனராகலை கிராமிய இதயத்துடிப்பு வலுவூட்டல் நிலையத்திற்கு JXG (ஜனசக்தி குழுமம்) ஆதரவளித்திருந்ததனூடாக, நோக்குகளை அடிப்படையாகக் கொண்ட பங்காண்மைகளினூடாக எவ்வாறு வாழ்வை மாற்றியமைக்கக்கூடியதாக இருக்கும் என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நாம் ஒன்றிணைந்து, உலகத் தரம் வாய்ந்த வசதிகள், வாழ்வை-மாற்றியமைக்கும் நிகழ்ச்சிகள் மற்றும் நிலைபேறான வாய்ப்புகள் போன்றவற்றை ஏற்படுத்தி, பின்தங்கிய சமூகங்களுக்கு நிலைபேறான வகையில் வலுவூட்டும் வாய்ப்புகளை உருவாக்கி, இலங்கை முழுவதிலும் நிலைத்திருக்கும் தாக்கத்தை ஏற்படுத்த எதிர்பார்க்கிறோம்.” என்றார்.

இலங்கையின் முதலாவது

# Playdium Pin League அறிமுகம்



Bowling மற்றும் விநோத அம்சங்கள் நிறைந்த வளாகமான Playdium, தனது முதலாவது Playdium Pin League (PPL) ஐ அண்மையில் வெற்றிகரமாக முன்னெடுத்திருந்தது. நாட்டின் விளையாட்டு மற்றும் ஓய்வுநேர அம்சங்களில் மிகவும் முக்கியமான முன்னேற்றமாக இது அமைந்திருந்தது.

அறிமுக போட்டித் தொடரில் சுமார் 22 அணிகள் பங்கேற்றதுடன், 100 க்கும் அதிகமான கூட்டாண்மை மற்றும் திறந்த விளையாட்டு வீரர்கள் பங்கேற்றனர். அனைவரும் Brunswick Champion Standard Bowling Alleys இல் போட்டியிட்டிருந்தனர். சர்வதேச போட்டித் தொடர்களில் பயன்படுத்தப்பட்டிருந்த அதே தொழில்னுட்பமாக அமைந்துள்ளது. நிகழ்வினூடாக விறுவிறுப்பான சூழல் ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன், இலங்கையில் bowling இன் அதிகரித்துச் செல்லும் பிரபல்யத்தன்மையின் மீது அனைவரின் கவனத்தையும் ஈர்த்திருந்தது.

இந்தப் போட்டியின் நிறைவின் போது, Panther Paces சம்பியன் விருதை வென்றதுடன், இரண்டாம் மற்றும் மூன்றாமிடங்களை முறையே Fireball மற்றும் Ball Burners அணிகள் பெற்றுக் கொண்டன.

Playdium இன் பணிப்பாளர் அஷான் டி லிவேரா கருத்துத் தெரிவிக்கையில், “இலங்கையின் முதலாவது Premier Bowling League ஐ முன்னெடுப்பது என்பது எமக்கு மிகவும் பெருமைக்குரிய மைல்கல்லாகும். சர்வதேச நியமங்களுக்கமைய கூட்டாண்மைகள் மற்றும் தனிநபர்களுக்கு bowling அனுபவத்தை பெறுவதற்கும், போட்டியாக முன்னெடுக்கவும், விநோத செயற்பாடாக ஈடுபடவும் களத்தை ஏற்படுத்திக் கொடுப்பது என்பது எப்போதும் எமது நோக்காக அமைந்திருந்தது. அறிமுக PPL வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டதனூடாக, இலங்கையில் இந்த விளையாட்டின் உறுதியான வளர்ச்சி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. வருடமொன்றில் இரு தடவைகள் இந்த போட்டியை முன்னெடுக்க நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம்.” என்றார்.

Shangri-La இன் One Galle Face Mall இன் கீள் தளத்தில் அமைந்துள்ள Playdium, இலங்கையின் மாபெரும் உலகத் தரம் வாய்ந்த bowling மற்றும் விநோத அம்சங்களுக்கான பகுதியாக சர்வதேச நியமங்களை பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதன் Brunswick Champion standard lanes மற்றும் மேம்படுத்தப்பட்ட புள்ளியிடல் கட்டமைப்புகளுக்கு அப்பால், 20,000 சதுர அடிகளில் அமைவிடம் காணப்படுவதுடன், பரந்த கவர்ந்திழுக்கும் பகுதிகளை கொண்டுள்ளது. அவற்றில், Arcade Games, Kids’ Play Area, VR Zone, Bumper Car Zone, Karaoke and Party வசதிகளுடன், Champions Table உணவகமும் அடங்கியுள்ளது.




மனித வாழ்வின் வளர்ச்சிக்கு

# வழிகாட்டும் நாளாகும்



நடராசா கோபிராம்,
உளவியல் சிறப்புக்கலை,
யாழ். பல்கலைக்கழகம்.

உலக சுற்றுலா தினம் (World Tourism Day) ஒவ்வொரு ஆண்டும் செப்டெம்பர் 27ஆம் திகதி உலகம் முழுவதும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இது ஒரு சாதாரண தினமாக அல்லாமல், மனித வாழ்வின் பல்வேறு கோணங்களை  பொருளாதாரம், சமூக ஒற்றுமை, உளவியல், கலாச்சாரம், கல்வி, ஆராய்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் ஒரு தளமாகக் கருதப்படுகிறது. சுற்றுலா என்பது வெறும் பயண அனுபவம் அல்ல, அது மனதையும் உடலையும் புதுப்பிக்கும் சக்தியாகவும், சமூக ஒற்றுமையை வலுப்படுத்தும் கருவியாகவும், தனிநபர் மற்றும் உலகளாவிய அடையாளங்களை விரிவுபடுத்தும் அறிவியல் பாலமாகவும் அமைந்துள்ளது. உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு சுற்றுலாவின் பல்வேறு அம்சங்களை உளவியல், விழிப்புணர்வு, சமூகப் பொறுப்பு, ஆராய்ச்சி, தரம், மேலும் இலங்கை அனுபவங்களையும் உலகளாவிய பங்களிப்புகளையும் கருத்தில் கொண்டு ஆராய்வது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

முதலில் உளவியல் பார்வையில் பார்த்தால், சுற்றுலா என்பது மனிதனின் மனநலத்தை மேம்படுத்தும் இயற்கையான சிகிச்சை எனக் கூறலாம். அதிகப்படியான வேலைச்சுமை, குடும்ப மற்றும் சமூக அழுத்தங்கள், நகர வாழ்வின் வேகம் ஆகியவை மன அழுத்தம், பதட்டம், மனச்சோர்வு போன்ற பிரச்சனைகளை அதிகரிக்கின்றன. பல உளவியல் ஆய்வுகள், பயணம் செல்லும் பழக்கம் கொண்டவர்களுக்கு மன அழுத்தம் குறையும், நம்பிக்கை அதிகரிக்கும், உற்சாகம் உயரும், மேலும் நினைவாற்றலும் சிருஷ்டிகர சிந்தனையும் வலுப்படும் என்பதை வெளிப்படுத்துகின்றன. 2010 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஒரு உலகளாவிய ஆராய்ச்சியில், சுற்றுலா பயணங்கள் மேற்கொள்ளும் நபர்களுக்கு மனச்சோர்வு குறைவதும், வாழ்க்கை திருப்தி அதிகரிப்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இயற்கை சூழல்களைக் காண்பது, புதிய பண்பாட்டு அனுபவங்களைப் பெறுவது, சுவாசிக்கும் காற்றின் மாறுபாடு, உணவுப் பழக்க வழக்கங்கள் என அனைத்தும் ஒருவரின் மனநிலைக்கு நேர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. சுற்றுலா எனும் அனுபவம் “mindfulness” எனப்படும் கவனயோகம் நிலையை உருவாக்குகிறது, அதாவது நிகழ்காலத்தை ஆழமாக உணர்ந்து மனதைச் சமநிலைப்படுத்தும் நிலை.

சமூகப் பார்வையில், உலக சுற்றுலா தினம் உலக மக்களை ஒன்றிணைக்கும் சிறந்த வாய்ப்பாகும். சுற்றுலா மூலம் உலகின் பல்வேறு நாடுகள் மற்றும் சமூகங்கள் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்கின்றன. கலாச்சாரம், பாரம்பரியம், உணவு, உடை, மொழி, கலை, நடனம் ஆகியவை பயணிகளின் அனுபவமாக மாறும்போது, மனித சமுதாயத்தின் பல்வகைமை அழகாக இணைகிறது. உலக சுற்றுலா நிறுவனம் (UNWTO) கூறுவதுபோல, சுற்றுலா என்பது உலகின் மிகப்பெரிய சமூக இயக்கம்; அது உலகளாவிய மக்களை இணைத்து, ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்தை வளர்க்கிறது. உதாரணமாக, இலங்கை (Sri Lanka) போன்ற நாடுகளில் உள்ள பண்பாட்டு, மத மற்றும் இயற்கை அழகுகள் உலகம் முழுவதும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கின்றன. இலங்கையின் சிகிரியா (Sigiriya), கந்தி (Kandy), அனுராதபுரம், பொலன்னறுவை, டம்புள்ளா போன்ற வரலாற்று இடங்கள் உலக பாரம்பரிய சின்னங்களாகவும், அருவிகள், கடற்கரை, தேயிலைத் தோட்டங்கள், விலங்கியல் பூங்காக்கள் இயற்கை வளங்களாகவும் சிறந்து விளங்குகின்றன. இவை அனைத்தும் பயணிகளை ஈர்த்து, சமூக உறவுகளை வலுப்படுத்துகின்றன.

சுற்றுலா தினம் விழிப்புணர்வை அதிகரிக்கும் நாளாகவும் கருதப்படுகிறது. இன்றைய உலகில் சுற்றுச்சூழல் சவால்கள், பசுமை அழிவு, காலநிலை மாற்றம், பிளாஸ்டிக் மாசுபாடு, காட்டு விலங்குகள் அழிவு போன்ற பிரச்சனைகள் தீவிரமாக உள்ளன. சுற்றுலா வளர்ச்சியிலும் இச்சவால்களை கவனிக்காமல் விட முடியாது. பொறுப்பான சுற்றுலா (Responsible Tourism) என்ற கருத்து உலகளவில் அதிகரித்து வருகிறது; அதாவது பயணிகள் தங்கள் பயணத்தில் பசுமை பாதுகாப்பு, கழிவு குறைப்பு, உள்ளூர் சமூகங்களின் உரிமை மதிப்பு ஆகியவற்றை கடைபிடிக்க வேண்டும். இலங்கையிலும் ‘eco-tourism’ என்ற கருத்து அதிகரித்து வருகிறது. உதாரணமாக, யாலா தேசிய பூங்கா (Yala National Park), வில்பத்து, சின்ஹராஜா மழைக்காடு போன்ற இடங்களில் சுற்றுலா வருகை அதிகமாக இருந்தாலும், சுற்றுச்சூழலைக் காப்பது ஒரு அடிப்படை விதிமுறையாக அறிவுறுத்தப்படுகிறது. உலகளவில் கூட, சுவிட்சர்லாந்து, நியூசிலாந்து, கொஸ்டாரிகா போன்ற நாடுகள் பசுமை சுற்றுலாவை (Green Tourism) முன்னிறுத்தி வருகின்றன. ஆராய்ச்சிகளின் படி, நிலைத்தன்மை அடிப்படையில் வடிவமைக்கப்படும் சுற்றுலா முறைகள் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கும், உள்ளூர் சமூகங்களின் பொருளாதார மேம்பாட்டுக்கும் உதவுகின்றன.

பொருளாதார பார்வையில், சுற்றுலா உலக பொருளாதாரத்தில் மிகப்பெரிய பங்கு வகிக்கிறது. உலக வங்கி மற்றும் UNWTO தரவுகளின்படி, உலகளவில் சுற்றுலா துறை 10%க்கும் அதிகமான உள்நாட்டு உற்பத்தி மதிப்பை (GDP) வழங்குகிறது, மேலும் கோடிக்கணக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்குகிறது. இவ்வாறு உருவாகும் வேலைவாய்ப்புகள் நேரடியாகவும் (ஹோட்டல், விமானம், வழிகாட்டி) மறைமுகமாகவும் (விவசாயம், கைத்தொழில், போக்குவரத்து) பரவுகின்றன. சமூகத்தில் வேலைவாய்ப்பு வளர்ச்சியும், பொருளாதார நிலைத்தன்மையும் ஏற்படுத்தும் முக்கிய சக்தியாக சுற்றுலா திகழ்கிறது. இலங்கை போன்ற நாடுகளுக்கு சுற்றுலா முதன்மை வெளிநாட்டு வருமானமாக உள்ளது. குறிப்பாக உள்நாட்டுப் போர் முடிந்த பின், இலங்கை சுற்றுலா வளர்ச்சி விகிதம் அதிகரித்து, 2018ஆம் ஆண்டு 2.3 மில்லியன் பயணிகளை ஈர்த்தது குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டு ஆரம்பத்தில் இருந்து தற்போது வரை 16 இலட்சத்திற்கு மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளமை இங்கே சுட்டிக்காட்டத்தக்கது. அதிலும் இந்த மாதம் 21ம் தேதி வரை 01 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் வருகை தந்தமை குறிப்பிடத்தக்கது. இந்தியா, ஐக்கிய அரபு இராச்சியம், ரஷ்யா, யேர்மன், சீனா, பிரான்ஸ் என்ன பல்வேறு நாடுகளில் இருந்து அதிகளமானவர்கள் சுற்றுலாவிகளாக இலங்கை வந்திருந்தனர். அத்துடன், உலகளாவிய பயணத்தளமான பிக் செவன் ட்ராவல்ஸ் (Big seven travels) தொகுத்த உலகின் 50 சிறந்த தீவுகளின் பட்டியலில் இலங்கை முதல் இடம் பிடித்துள்ளமை இங்கே உற்று நோக்கத்தக்கது. உலகளாவிய அளவிலும், பிரான்ஸ், ஸ்பெயின், அமெரிக்கா, இத்தாலி, தாய்லாந்து போன்ற நாடுகள் சுற்றுலாவில் அதிக வருமானத்தை ஈட்டுகின்றன.

ஆராய்ச்சி மற்றும் கல்வித் துறையிலும் உலக சுற்றுலா தினத்தின் முக்கியத்துவம் அதிகம். சுற்றுலா உளவியல், சமூக மற்றும் கலாசார ஆய்வுகளுக்கு பெரும் பங்களிப்பு செய்யக்கூடியது. பயணிகள் எதற்காக ஒரு இடத்தைத் தேர்வு செய்கிறார்கள், அவர்கள் அனுபவம் எவ்வாறு மனநிலையில் தாக்கம் செய்கிறது, எந்த விதமான சேவைகள் அதிக திருப்தியைத் தருகின்றன போன்ற ஆய்வுகள் கல்வித்துறையில் புதிய வழிமுறைகளை உருவாக்குகின்றன. இலங்கையிலும் பல பல்கலைக்கழகங்கள் சுற்றுலா மேலாண்மை, ஹோட்டல் மேலாண்மை, சுற்றுச்சூழல் சுற்றுலா ஆகியவற்றில் சிறப்புப் பட்டங்களை வழங்கி வருகின்றன. இது நாட்டின் இளைஞர்களுக்குத் திறன்கள் வளர்த்து வேலைவாய்ப்பை உருவாக்கும் ஒரு சமூக பங்களிப்பாகும். உலகளாவிய அளவிலும், சுற்றுலா கல்வி மற்றும் ஆராய்ச்சி துறைகள் பரவலாக வளர்ந்து, நிலையான சுற்றுலா மாதிரிகளை உருவாக்குகின்றன.

உலக சுற்றுலா தினத்தின் மூலம் நாம் அறிந்து கொள்ள வேண்டிய மிகப் பெரிய உண்மை என்னவென்றால், சுற்றுலா என்பது உலக மக்கள் அனைவரையும் ஒரே குடும்பமாக இணைக்கும் பாலமாகும். உளவியல் அடிப்படையில் மனநல மேம்பாடு, சமூக அடிப்படையில் ஒற்றுமை, சுற்றுச்சூழல் அடிப்படையில் நிலைத்தன்மை, பொருளாதார அடிப்படையில் முன்னேற்றம், கல்வி மற்றும் ஆராய்ச்சி அடிப்படையில் புதிய அறிவு, இவை அனைத்தையும் ஒருங்கிணைக்கும் சக்தியாகச் சுற்றுலா உள்ளது. இலங்கை பார்வையில் பார்த்தாலும், உலகளாவிய பங்களிப்புகளிலும் சுற்றுலா மனித சமூகத்தின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் சக்தியாகவே திகழ்கிறது.

எனவே உலக சுற்றுலா தினம் ஒரு விழாவாக மட்டுமல்ல, மனித வாழ்வின் முழுமையான வளர்ச்சிக்கும் வழிகாட்டும் நாளாகும். இது நமக்கு நினைவூட்டுவது பயணம் என்பது ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்வதல்ல, அது மனம், சமூகம், சுற்றுச்சூழல், பொருளாதாரம் ஆகிய அனைத்தையும் இணைக்கும் வாழ்வின் தத்துவமாகும். உலகம் முழுவதும் மக்கள் இந்த தினத்தை பொறுப்புடனும், விழிப்புணர்வுடனும், உளவியல் மற்றும் சமூக ஒற்றுமையுடனும் கொண்டாடினால், அது உலக அமைதி, நட்பு, நம்பிக்கை ஆகியவற்றை உறுதிப்படுத்தும். மனித வாழ்வின் தரம் உயர்ந்து, எதிர்காலம் பசுமை, சமநிலை, ஒற்றுமை நிறைந்ததாக மாறும்.

நவராத்திரி கால



# கும்பத்துமால் நிகழ்வு

யே.வினிதா,
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

ஒவ்வொரு பிரதேசத்திற்கும் ஒவ்வொரு தனித்துவமான கலாசார அடையாளம் உண்டு. அந்த வகையில், திருகோணமலை மாவட்டத்தில் கொண்டாடப்படும் தனித்துவமிக்க சமய பண்பாட்டு நிகழ்வுகளில் 'கும்பத்துமால்' நிகழ்வும் ஒன்று குறிப்பாக இதன் சிறப்பம்சங்கள் பொருந்திய பல தன்மைகளை மூதூர் கிழக்கு பிரதேசங்களில் உள்ள சேனையூர், கட்டைபறிச்சான் கடற்கரைச்சேனை, சாலையூர் வாழ் மக்களிடையே இது சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இச்சடங்கு கும்பத்துமால் என அழைக்கப்படுகின்றது. அதாவது கும்பம் + மால் என்பதாக அமையும். மால் என்பது குடிலைக் குறிக்கின்றது. அதாவது தென்னோலையால் குடில் அமைத்து அதிலே கும்பம் வைக்கப்படும்.நவராத்திரியுடன் தொடப்பட்ட ஒரு சடங்காகும். பாடசாலைகளில் ஆகமம் சார்ந்த ஆலயங்களில் கும்பமானது பார்வதி, சரஸ்வதி ,லட்சுமி ஆகிய தெய்வங்களுக்குக் கும்பம் வைக்கப்படும். ஆனால், இங்கு வாளை (மாரியம்மன்), புவன (காளி), திருபர (வராகி) ஆகிய மூன்று தெய்வங்களுக்கும் தனித்தனியே கும்பம் வைக்கப்படும். கும்ப விரதம் இருப்பவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கும்பங்கள் தொடக்க நாளிலேயே வைக்கப்படும். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கலையை அதாவது தெய்வங்களை நிறுத்தி கும்பம் வைப்பர். தொடக்க நாளிலிருந்து 9 நாள் இரவு வேளைகளிலும் கும்பத்திற்குப் பூசை செய்து அங்கே சாமியாட்டுவிக்கப்படும். அதிலே மக்களுக்கு கட்டுச் சொல்லுதல் இடம்பெறும். மேலும் இந்த சாமி ஆடுபவர்களுக்கு சாட்டையடி போன்றன இடம்பெறும். கட்டு கேட்பதற்கென்று அநேகமான பக்தர்கள் வருவது வழக்கம். கும்பம் வைத்து மூன்றாவது நாள் கரகம் எனப்படும் அம்மனின் முகம் அந்த ஊர் முழுவதும் கொண்டு செல்லப்படும்.

ஒவ்வொரு வீட்டினரும் அம்மனை வீட்டிற்குள் அழைத்து திருநீறு வாங்குவர்.இவ்வாறு ஒன்பது நாள் முடிந்த பத்தாவது நாள் கன்னி வாழை வெட்டுதல் இடம்பெறும.; இங்கே ஒரு வெட்டிலே மூன்று துண்டுகளாக வாழை வெட்டப்படும். இந்த கன்னிவாழை வெட்டுதலுடன் தொடர்புடைய கதையாக மகிக்ஷாசுரமர்த்தினி மகிஷாசுரனை வதம் செய்து ஆக்ரோஷத்துடன் புறப்படுவதாகும். அதாவது கன்னிவாழை வெட்டியவுடன் கும்பம் தூக்கப்படும். இங்கு கன்னி வாழை மகிஷாசுரனாக காட்டப்படுகின்றது.

இவ்வாறு தூக்கப்படும் கும்பம் ஆனது கரகம் எந்த இடம் எல்லாம் சென்றதோ அவ்விடங்களுக்கெல்லாம் கும்பம் சுற்றுதல் இடம் பெறும். இதனை உள்ளிருந்து பார்ப்பவர்கள் தெய்வமாக பக்தி பூர்வமாக உள்வாங்குவார்கள். வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு உண்மையில் ஒரு நிகழ்த்து கலையாக தென்படும். கும்பம் ஆனது வீதிகளில் கொண்டு செல்லப்படும் போது கும்பம் தூக்குபவர்கள் ஆடியபடியே செல்வார்கள். இங்கே சாமியாட்டமும் இடம்பெறும். இதற்கென தனி ஆடைகள் செய்து கும்பம் தூக்குபவர்கள் அணிந்திருப்பார்கள். கும்பம் தூக்கி வருகின்ற காட்சியே அழகாகவும் தெய்வீக உணர்வையும் பார்ப்பவர்களுக்குள் ஏற்படுத்திவிடும். கும்பமானது ஊரெல்லாம் வீதிகள் சுற்றி வரும்போழுது மறிப்பு கட்டுதல் இடம்பெறும்.

அதனை கோயில் நிர்வாகத்துடன் தொடர்புடைய பூசாரிகள் மறிப்பு எடுத்தல் என்பன இடம்பெறும். மறிப்பு கட்டுவதற்காக வெளி மாவட்டங்களில் இருந்தும் வேறுபிரதேசங்களில் இருந்தும் வருவார்கள். இதனைப் பார்வையிட ஊரவர்கள் மட்டுமின்றி பலரும் ஒன்று கூடுவர். குறிப்பாக மூதூர் பிரதேசமானது முஸ்லிம்கள் இந்துக்கள் சிங்களவர்கள் வாழ்கின்ற ஒரு இடமாகும். இதனால் இக்கும்ப ஆட்டத்தைப் பார்வையிட அனேகமான முஸ்லிம்கள் ஒன்று கூடுகின்றனர்.

மறிப்பு கட்டுதல் ஆனது வீதிகளில் இடம்பெறும் இதன் போது தெய்வத்தினுடைய பாடல்கள் உச்சரிக்கப்படும். சிலம்பு, சல்லரி, பறை, தாளம் போன்ற கருவிகள் இப் பாடல்களுக்கு வலு சேர்க்கும் வகையில் இசைக்கப்படும். இவ்வாறு நிர்வாகத்தினருடன் இவ்வாட்டத்தைப் பார்க்க வரும் மக்களும் இணைந்து பாடுவார்கள். ஒவ்வொரு வீட்டினரும் கும்பத்தை நிறைகுடம் வைத்து வரவேற்பர்.

இவ்வாறு மூன்று நாட்கள் ஊர் முழுவதும் சுற்றி இறுதியில் கடலில் சென்று கும்பம் சொரிக்கப்படும். இதன் போது மறிப்பிலிருந்து கலையை ஆடுபவர்களை {சாமியாடுபவர்களை} வெளியே எடுக்கும் போது பலி தருவதாகக் கூறியிருப்பார்கள். அதனைக் கும்பம் சொரிக்கும் சந்தர்ப்பத்தில் நீத்து பூசணிக்காய், தேங்காய், முட்டை, தேசிக்காய் என்பன பலியாகக் கொடுக்கப்படும். இவ்வாறு அங்கு நடைபெறும் பூசைக்கு மங்கள பூசை என கூறுவர். இவை முடிந்ததும் கோவிலுக்குச் சென்று மகிஷாசுரமர்த்தினையின் கோபத்தைத் தணித்து அவரை குளிர்விப்பதாகக் குளிர்த்தி பாடப்படும். இவ்வாறு மூன்றாவது நாள் கோயிலைத் தாண்டி ஒரு இடத்தில் சக்தி பூசை இடம்பெறும். இங்கே மாமிசம் ,சாராயம் என்பன அங்கே வைத்து வழிபடப்படும் . இவ்வாறு வருடத்தில் ஒருமுறை இச்சடங்கானது நிகழ்த்தப்படுகிறது.

இலங்கையில் வேறெந்தப் பகுதியிலும் காணப்படாத இவ்வழிபாடு பற்றிய தோற்ற காரணம் அறியப்பட வேண்டியது ஒன்றே. கும்பம் பற்றி பண்டிதர் வடிவேல் அவர்கள் சீக்கியர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது என குறிப்பிட்டுள்ளதாகப் பல குறிப்புக்களில் எழுதியுள்ளனர். ஆனால், சீக்கியரது மத அனுஷ்டானங்களிலோ அவர்களது கலை நிகழ்வுகளிலோ இத்தகைய கலாசார அடையாளங்களைக் காணமுடியவில்லை. அவர்களது நடனமாக பங்காரா நடனமும் அதனோடு இணைந்து துள்ளல் இசையும் அமைந்திருக்கிறது. அத்துடன் அவர்களது சடங்கு முறைகளில் கும்பம் போன்ற எந்த ஆதாரத்தையும் காணமுடியவில்லை.

இதனை மறுதலிக்கும் கிழக்கு பல்கலைக்கழக கலை கலாச்சார பீடாதிபதியான பாலசுகுமார், " கேரளாவில் நடைமுறையில் உள்ள சடங்குகளில் நாம் இந்த கும்பம் முறையிலான அமைப்பைக் காணலாம். தேயாட்டம், துள்ளல் பகவதி அம்மனுக்கு நடக்கும் சடங்குகள் நம் கும்ப சாயலைக் கொண்டுள்ளது" என்று கூறுகிறார்.

எது எப்படி இருப்பினும், இலங்கையில் திருக்கோணமலை தவிர்ந்து வேறு எந்த மாவட்டத்தில் மட்டுமின்றி, இந்தியா உட்பட உலகின் வேறு எந்த நாட்டிலும் கும்ப விழா நடைமுறையில் இல்லை என்றே சொல்லலாம்.





சூழல் சமநிலையை பேணும்

# தேனீக்களின் இன்றைய நிலை

சிவநாதன் பவித்ரா,
மூன்றாம் வருடம் ,
புவியியல் துறை ,
யாழ். பல்கலைக்கழகம்.

சூழல் அமைப்பின் சமநிலையைத் தாங்கி நிற்கும் மகரந்த சேர்க்கையாளர்களில் முதன்மையானவை தேனீக்கள். உலகளவில் விளையும் உணவுப் பயிர்களில் சுமார் 75% பயிர்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ தேனீத் மகரந்த சேர்க்கையின் மீது சார்ந்துள்ளன என்பது FAO வெளியிட்ட 2023ஆம் ஆண்டின் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகின் விவசாயம், உயிர் சமுதாயம் மற்றும் உணவுக் களஞ்சியத்தில் அவசியமான பங்களிப்பை வழங்கும் உயிரினங்களாகும். எனினும் கடந்த இருபது ஆண்டுகளாக, தேனீக்களின் உலகளாவிய எண்ணிக்கை கணிசமாகக் குறைந்து வருவது விஞ்ஞானிகளையும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களையும் தீவிரமாகக் கவலைக்குள்ளாகியுள்ளது.

இதனால் அவை "அழிந்து வரும் உயிரினங்கள்" (Endangered Species) பட்டியலுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. தேனீக்கள் இன்று உலகம் முழுவதும் கணிசமாகக் குறைந்து வருவது மிகப்பெரும் சுற்றுச்சூழல் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. 2006 முதல் அமெரிக்காவில் "Colony Collapse Disorder (CCD)" எனப்படும் பெரும் வீழ்ச்சி சந்திப்பு ஏற்பட்டு, ஒரு ஆண்டில் 40% தேனீ கூட்டங்கள் அழிந்த காலகட்டங்கள் பதிவாகியுள்ளன. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் 2000 முதல் 2020 வரை காட்டு தேனீக்களில் 33% இனக்குறைவு ஏற்பட்டுள்ளதாகவும், தென்கிழக்காசியாவில் உள்ள இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் காட்டுத் தேனீ தொகை 20 முதல் 25% வரை குறைந்துள்ளதாகவும் IUCN, UNEP ஆய்வுகள் குறிப்பிட்டுள்ளன.

உலகளவில் 20,000க்கும் மேற்பட்ட தேனீ இனங்கள் உள்ளன. அதில் அப்பிஸ் மெலிபெரா (Apis mellifera) எனப்படும் ஐரோப்பியத் தேனீ உலக சந்தைகளில் 80% தேனீ வளர்ப்பில் பயன்படுத்தப்படுகிறது. அப்பிஸ் டோர்சாடா (Apis dorsata) போன்ற காட்டுத் தேனீக்கள் தென்கிழக்கு மற்றும் தென்னாசிய நாடுகளில் இயற்கை மகரந்த சேர்க்கைக்கு பாரிய பங்காற்றுகின்றன. இலங்கையில் மட்டுமே சுமார் 150 தேனீ இனங்கள் உள்ளதாகவும் அதில் 12 இனங்கள் மனிதக் கட்டுப்பாட்டில் வளர்க்கப்படுகின்றனவாகவும் உயிரியல் ஆய்வு மையங்கள் தெரிவிக்கின்றன.

தேனீக்களின் அழிவிற்கு முக்கிய காரணிகளாகப் பூச்சிக்கொல்லி மருந்துகள், குறிப்பாக நியோனிகோட்டினாய்டு (Neonicotinoid) வகை வேதிப்பொருட்கள் அதிகப்படியாகப் பயன்படுத்தப்படுவது முதலிடம் வகிக்கிறது. 2018ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியம் இந்த மருந்துகளைத் தடை விதிக்க வேண்டிய நிலைக்கு வந்தது. மேலும் காலநிலை மாற்றத்தால் வட அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியப் பகுதிகளில் உள்ள காட்டு மலர் தாவரங்கள் 20% குறைந்துள்ளன. எடுத்துக்காட்டாகக் கனடாவின் தெற்குப் பகுதிகளில் வாழும் பம்பிள் பீஸ் இனங்களில் பாதிக்கு மேற்பட்டவை இனக் காழ்ப்புகளின் காரணமாக அழிவின் விளிம்பில் உள்ளன.

வரோயா மைட் எனப்படும் பராசிட்கள் தேனீ கூட்டங்களில் பரவி 2020 முதல் 2023 வரை ஆசியப் பிராந்தியங்களில் தேனீ மரணங்களில் 30%க்கு காரணமாகியுள்ளது. நகர்ப்புற விரிவாக்கம் மற்றும் ஒரே வகை பயிர்கள் விளையும் "மோனோக்ராப்" முறைகள் தேனீக்கும் மலர்த் தாவரங்களுக்கும் இடையே இயற்கையான இடைத்தொடர்புகளை குறைத்துள்ளன.

தேனீக்கள் வாழ்க்கைச் சுழற்சியிலும் சமூக அமைப்பிலும் சிறப்பான கட்டமைப்பைக் கொண்டவை. ராணித் தேனீ ஆண்டுக்கு 1.5 இலட்சம் முட்டைகள் வரை இடும் திறன் கொண்டது. தொழிலாளர் தேனீக்கள் 45 நாட்கள் வரை மட்டுமே வாழ்ந்தாலும் அவர்கள் தினமும் நூற்றுக்கணக்கான மலர்களுக்கு மகரந்த சேர்க்கையைச் செய்கின்றனர். 'solitary bees' எனப்படும் இனங்களில் கூட ஆப்பிரிக்கா மற்றும் தென் அமெரிக்காவில் உள்ள பகுதிகளில் நிலச்சரிவு, காடு அழிப்பு காரணமாக நூற்றுக்கணக்கில் அழிவு ஏற்பட்டுள்ளது. அவை இயற்கை தாவர இனப்பெருக்கத்தின் 30% வரை பங்களிக்கின்றன என்பதைக் கவனிக்காமல் உலகம் நீண்ட காலம் இருந்துவிட்டது.

தேனீக்களைப் பாதுகாக்க சில நாடுகள் வலுவான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. உதாரணமாக பின்லாந்து, நெதர்லாந்து மற்றும் நியூசிலாந்து ஆகியவை நகர்ப்புறங்களில் "Bee Highways" எனப்படும் மலர்த் தாவர வழித்தடங்களை அமைத்து தேனீக்கள் நகரங்களுக்கு இடையே தஞ்சம் அடைய உகந்த சூழலை உருவாக்குகின்றன. இந்தியாவில் 2021ஆம் ஆண்டில் 'Sweet Revolution' எனும் திட்டத்தின் மூலம் தேனீ வளர்ப்பு மூலம் கிராமப்புற மக்களுக்கு வருமான வசதி மற்றும் இயற்கை மகரந்த சேர்க்கைக்கான மேம்பாட்டு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டது. இலங்கையில் மத்திய மாகாணம், உவா மாகாணம் மற்றும் சபரகமுவா பிரதேசங்களில் காட்டு மலர்த் தாவரங்கள் அடிப்படையிலான தேனீ வளர்ப்பு திட்டங்கள் 2022 முதல் நடைமுறைக்கு வந்துள்ளன.

இந்த தேனீக்களின் அழிவென்பது சுற்றுச்சூழலின் ஒரு தனி உயிரின் இழப்பாய் அல்ல, மாறாக மனித சமுதாயத்திற்கே எதிரான பொருளாதார, உணவுப் பாதுகாப்பு மற்றும் உயிரியல் சீரழிவைக் குறிக்கின்றது என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. உலகின் எதிர்கால உணவுத் தேவைகளையும் உயிரியல் மண்டலங்களின் நிலைத்தன்மையையும் காக்க வேண்டுமானால் தேனீ பாதுகாப்பு இன்று தேசிய மற்றும் உலகளாவிய சுற்றுச்சூழல் கொள்கைகளின் முதன்மைக் கட்டமாக மாற வேண்டியுள்ளது.





# கரூர் வேலுசாமிபுரத்தின் சோக காட்சிகள்



கரூரில் தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் சனிக்கிழமை (27) அன்று பிரசாரம் மேற்கொண்டார். கரூர் வேலுச்சாமிபுரத்தில் இரவு 7 மணிக்குமேல் பிரசாரம் நடைபெற்றது. பிரசார கூட்டத்தின்போது, திடீரென கூட்ட நெரிசல் ஏற்பட்டது.

இந்த கூட்ட நெரிசலில் சிக்கி 10 குழந்தைகள், 17 பெண்கள், 12 ஆண்கள் என மொத்தம் 39 பேர் உயிரிழந்தனர்.

சிதறிக்கிடக்கும் காலணிகள், தவெக தொண்டர்கள் அணிந்திருந்த கசங்கிய கட்சி துண்டுகள், கிழிந்து கிடக்கும் பேனர்கள் என கரூர் வேலுசாமிபுரத்தின் கூட்டம் நடந்த இடம் சோகத்தின் அத்தனை வடுக்களையும் வெளிப்படுத்துவதாக உள்ளது.























## இலங்கையின் டிஜிட்டல் எதிர்காலத்தை துரிதமாக மேம்படுத்துவதில்

# SLT-MOBITEL பங்களிப்பு வழங்குகிறது





தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குனரான SLT-MOBITEL, உறுதியான நிதிசார் மீட்சியைப் பதிவு செய்திருந்ததைத் தொடர்ந்து, தேசத்தின் மூலோபாய செயற்படுத்துனராக செயலாற்றும் வகையில் இலங்கையின் டிஜிட்டல் எதிர்காலத்தை துரிதமாக மேம்படுத்துவதில் பங்களிப்பு வழங்க முன்வந்துள்ளது. அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கும் நிலையில், தேசத்தின் டிஜிட்டல் மயமாக்கல் செயற்பாடுகளை துரிதப்படுத்த SLT-MOBITEL எதிர்பார்ப்பதுடன், சகல துறைகளின் பொருளாதார வளர்ச்சிக்கும் வலுவூட்டவும் முன்வந்துள்ளது.

நிறுவனத்தின் பங்குகளை விற்பனை செய்வதில் கவனம் செலுத்தப்பட்ட நிலையில், 2025 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டில் உறுதியான இலாபத்தை பதிவு செய்திருந்தமையானது, தேசத்தின் தொழில்நுட்ப கட்டமைப்பு மற்றும் பொருளாதார சுபீட்சம் ஆகியவற்றை வரையறுக்கக்கூடிய டிஜிட்டல் உட்கட்டமைப்பை கட்டியெழுப்பும் நிலைக்கு SLT-MOBITEL ஐ நிலைநிறுத்தியுள்ளது.

**அரசாங்க டிஜிட்டல் மயமாக்கலுக்கு வலுவூட்டல்**

இலங்கையின் பொதுத் துறையை டிஜிட்டல் மயமாக்குவதில் SLT-MOBITEL இன் முக்கியமான பங்களிப்பு என்பது மாற்றத்தின் மையமாக அமைந்துள்ளது. இலங்கை அரசாங்க வலையமைப்பு (LGN) என்பது, நிறுவனங்களுக்கிடையிலான இணைப்புக்கான முதுகெலும்பாகச் செயற்பட்டு, ஒப்பற்ற இணைந்த செயற்பாடுகளுக்கும், அனைத்து மட்டங்களிலும் உள்ளe-ஆளுகைத்தளங்களுக்கும் ஆதரவளிக்கிறது. டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் வழிகாட்டலின்கீழ் SLT-MOBITEL இனால் நிர்வகிக்கப்படும் LGN, உறுதித்தன்மை, பாதுகாப்பு மற்றும் அளவிடும் தன்மை ஆகியவற்றை உறுதிசெய்து, தேசத்தின் வளர்ந்து வரும் டிஜிட்டல் நிர்வாககட்டமைப்பிற்கு ஓர் உறுதியான அடித்தளத்தை உருவாக்குகிறது.

LGN-க்குஆதரவாக, SLT-MOBITEL இனால் முழுமையாக நிர்வகிக்கப்படும்Lanka Government Cloud (LGC), ஸ்மார்ட் ஆளுகைக்கான பயன்பாடுகளுக்கு, அளவிடும் தன்மை கொண்ட, எதிர்காலத்திற்குத் தயாரான உட்கட்டமைப்பை வழங்குகிறது. artificial intelligence, big data analytics மற்றும் advanced digital services போன்றவற்றுக்கு LGC ஆதரவளிக்கிறது. அதன் மூலம், அரசாங்க நிறுவனங்கள், மேலும் வினைத்திறன் மிக்க மற்றும் பயனுள்ள பொதுச்சேவைகளை வழங்கக்கூடிய வகையில் தரமுயர்த்தப்படுகின்றன.

SLT-MOBITELகுழுமத் தவிசாளர் கலாநிதி. மோதிலால் டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில். "SLT-MOBITEL இனால் இலங்கையின் டிஜிட்டல் உட்கட்டமைப்பை கட்டியெழுப்புவதற்காகவும், நவீன மயப்படுத்துவதற்காகவும் தொடர்ச்சியாக முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த பெருமளவு முதலீடுகளில் ஃபைபர் வலையமைப்புகள், 4G மற்றும் 5G மற்றும் cloud போன்றன அடங்கியுள்ளதுடன், தேசத்தின் டிஜிட்டல் மாற்றச் செயற்பாடுகளில் முதுகெலும்பாக அமைந்துள்ளன. இலங்கை தொலைத்தொடர்பாடல் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் (TRCSL) ஆதரவு மற்றும் வழிகாட்டல்களுக்கு நாம் பெரிதும் நன்றி தெரிவிக்கின்றோம். இந்த மேம்படுத்தல்களை மேற்கொள்வதில் அவர்களுடனான பங்காண்மை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது." என்றார்.

கலாநிதி. டி சில்வா தொடர்ந்தும் குறிப்பிடுகையில், "2025 இன் முதல் அரையாண்டு காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட வியத்தகு நிதிசார் முன்னேற்றம், SLT-MOBITELஇன் எதிர்காலத்தில் அத்தியாவசியமான அடித்தளத்தை ஏற்படுத்தியுள்ளது. முன்பு பதிவு செய்திருந்த ரூ. 323 மில்லியன் இழப்பை, நாம் ரூ. 4.28 பில்லியன் வரிக்குப் பிந்திய இலாபமாக மாற்றியிருந்தோம். வருமானம் ரூ. 55.2 பில்லியனாக உயர்ந்திருந்ததுடன், EBITDA பெறுமதி ரூ. 21.7 பில்லியனாக உயர்ந்திருந்தது. செயற்பாட்டு சிறப்பு மற்றும் ஒழுக்கமான நிர்வாகம் போன்றவற்றினால் இந்த சாதனை சாத்தியமாகியிருந்ததுடன், தேசிய டிஜிட்டல் செயற்பாடுகளை துரிதமான முன்னெடுக்கவும், அடுத்த தலைமுறை தொழில்நுட்பங்களில் முதலீடுகளை மேற்கொள்ளவும், இலங்கையின் டிஜிட்டல் எதிர்காலத்துக்கு வலுவூட்டும் உறுதி மொழியை நிறைவேற்றுவதற்கும் எமக்கு வலுச்சேர்த்துள்ளது. எதிர்கால தலைமுறையினரை மேம்படுத்த, உலகத்தரம் வாய்ந்த இணைப்புத்திறன் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றைப் பெற்றுக் கொடுக்கக்கூடிய, நிலைபேறான வகையில் நிர்வகிக்கப்படும் நிறுவனமான SLT-MOBITEL ஐ மாற்றியமைக்க நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம்." என்றார்.

**5Gஇன் பலத்தை வெளிப்படுத்தல்**

பரீட்சார்த்த செயற்பாடுகள் மற்றும் தொடர்ச்சியான கொள்முதல் செயற்பாடுகள் போன்றவற்றைத் தொடர்ந்து, இலங்கையின் 5G வலையமைப்பை அறிமுகம் செய்ய SLT-MOBITEL திட்டமிட்டுள்ளது. ஒளிஅலைகளின் அலைவரிசைகளின் (spectrum band) மூலோபாய ரீதியிலான ஒன்றிணைப்புகளினூடாக, செம்மையாக்கப்பட்ட வினைத்திறன் வழங்கப்படும் என்பதுடன், ஐந்தாண்டு காலப்பகுதியில் சாதனைமிகுந்த சேமிப்பையும் பெற்றுக் கொடுக்கும். வணிக ரீதியிலான 5G அறிமுகத்தினூடாக, ultra-lowlatency மற்றும் பாரிய இணைப்புகள் போன்றவற்றினூடாக தொழிற்துறைகளை மாற்றியமைக்கும். அத்துடன், ஸ்மார்ட் நகரங்கள், தன்னியக்கமான கட்டமைப்புகள், IoT உற்பத்தி மற்றும் அசல்-நேர அப்ளிகேஷன்கள் போன்றவற்றுடன், இலங்கையை சர்வதேச டிஜிட்டல் புத்தாக்கத்தில் முன்னிலையில் திகழச் செய்வதற்கு ஏதுவாக அமைந்திருக்கும்.

**வியாபாரச் சூழலை பரந்துபடுத்தல்**

அனைத்துஅளவிலானவியாபாரங்களும்உலகத்தரம்வாய்ந்தஇணைப்புமற்றும்டிஜிட்டல்தீர்வுகளைஅணுகும்போது, டிஜிட்டல் பொருளாதாரம்செழித்துவளரும்என்பதை SLT-MOBITEL உணர்ந்துள்ளது. தொழில்நுட்பஆரம்பநிலை நிறுவனங்கள், சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகள், அரசாங்க நிறுவனங்கள் மற்றும் பாரிய நிறுவனங்கள்உட்பட, தொழில்துறையின் முழு அளவிற்கும்சேவைசெய்வதற்காக, வடிவமைக்கப்பட்ட தனிப்பயனாக்கப்பட்ட, அளவிடக்கூடிய தீர்வுகளை இந்நிறுவனம் வழங்குகிறது.

டிஜிட்டல் பொருளாதாரத்தின் பிரதான செயற்பாட்டாளர்களாக தொழில்நுட்ப ஆரம்பநிலை நிறுவனங்கள் காணப்படுவதுடன், வளர்ச்சியை தூண்டுவதற்கு அவசியமான சகாயமான இணைப்பு, cloud சேவைகள் மற்றும் டிஜிட்டல் சாதனங்கள் போன்றவற்றை வழங்கி SLT-MOBITEL ஆதரவளிக்கிறது. இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக அமைந்துள்ள சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகள் வினைத்திறனான வகையில் போட்டியிடுவதற்கு அவசியமான, சைபர் இணைய பாதுகாப்பு மற்றும் அத்தியாவசிய தொழில்நுட்பங்கள் போன்றவற்றுடனான டிஜிட்டல் மாற்றியமைப்பு பக்கேஜ்களினூடாக பயன் பெறுகின்றன.

நுண் சிறு நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகளுக்கான SME Xcelerate, ICT soft bundles போன்ற மாற்றியமைத்துக் கொள்ளத்தக்க தீர்வுகளினூடாக SLT-MOBITEL வலுவூட்டுகின்றது. ஆரம்பநிலை நிறுவனங்களுக்கு இணைப்புத்திறன், சைபர் இணைய பாதுகாப்பு, cloud மற்றும் டிஜிட்டல் தேவைகள் போன்றவற்றை நிவர்த்தி செய்யும் StartSmart பக்கேஜை வழங்குகிறது. நிறுவனங்கள் மட்டத்தில், அடுத்த தலைமுறை பாதுகாப்பான வலையமைப்பு தீர்வுகள் மற்றும் cloud-native கட்டமைப்புகள் போன்றவற்றை SLT-MOBITEL வழங்கி, வியாபாரங்களுக்கு தம்மை நிலைஉயர்த்திக் கொள்வதற்கும், அப்ளிகேஷன்களை நவீனமயப்படுத்திக் கொள்ளவும், டிஜிட்டல் மாற்றியமைப்பு செயற்பாடுகளை முன்னெடுக்கவும் ஆதரவளிக்கிறது.

அரசாங்க நிறுவனங்கள் மற்றும் பாரியளவு நிறுவனங்கள் போன்றன வினைத்திறன், உற்பத்தித்திறன் மற்றும் டிஜிட்டல் மாற்றியமைப்பு செயற்பாடுகளை தூண்டுவதற்கான நிறுவன-தர உட்கட்டமைப்பை பெற்றுள்ளன. SLT-MOBITEL இன் உள்ளடக்கமான வழிமுறையினூடாக, தேசிய டிஜிட்டல் மயமாக்கல் திட்டத்துக்கு ஆதரவளிக்கப்படுவதுடன், இலங்கையின் பொருளாதார மாற்றியமைப்பில் சகல துறைகளையும் பங்களிப்புச் செய்வதற்கு வழிகோலுவதாகவும் அமைந்துள்ளது.

**தேசிய டிஜிட்டல் சமத்துவத்தை முன்னெடுத்தல்**

அனைத்து இலங்கையர்களாலும் தொழில்நுட்பம் அணுகப்படுவது மற்றும் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யும் வகையில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளினூடாக உள்ளடக்கத்திற்கான SLT-MOBITEL இன் அர்ப்பணிப்பு பிரதிபலிக்கப்பட்டுள்ளது. கல்வி அமைச்சுடன் இணைந்து வடிவமைக்கப்பட்டு TRCSL இன் தலைமைத்துவத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் பாடசாலைகளை பைபர் மயமாக்கல் திட்டத்தின் கீழ், நூற்றுக் கணக்கான பாடசாலைகள் இணைக்கப்பட்டுள்ளன. அதனூடாக மாணவர்களுக்கு அதி-வேக, நிலையான மற்றும் பொருடக்கம் வடிகட்டப்பட்ட Fibre-to-the-Home (FTTH) இணைப்பை அணுகும் வசதி வழங்கப்பட்டுள்ளது. "கமட்ட சன்னிவேதனய" (கிராமத்துக்கு தொடர்பாடல்) திட்டத்தினூடாக, கிராமிய பகுதிகளில் இணைப்புத்திறன் மேம்படுத்தப்பட்டு வருவதுடன், வருடாந்தம் விரிவாக்கப்பட்டு, நாட்டின் சகல பாகங்களுக்கும் டிஜிட்டல் வாய்ப்புகள் சென்றடைவதை உறுதி செய்கிறது.

மேலும், இலங்கையின் முதலாவது தேசிய AI Expo மற்றும் மாநாடு 2025 ஆன National AI Expo & Conference 2025 முன்னெடுக்கப்படுவதுடன், 2026 ஆம் ஆண்டுக்காக பிராந்திய நிகழ்வுகள் முன்னெடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அதனூடாக நவீன தொழில்நுட்பம் மற்றும் அறிவுக்கு சமத்துவமான அணுகல் வசதியை பெற்றுக் கொடுக்க எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்ந்து முன்னெடுக்கப்படும் கம்பியில்லாவலையமைப்பு விரிவாக்கத்தினூடாக, பின்தங்கிய சேவைகள் வழங்கப்படாத பகுதிகளில் கவனம் செலுத்தப்படுவதுடன், டிஜிட்டல் பாகுபாட்டை நிவர்த்தி செய்து, பரந்த தேசிய வலையமைப்பை ஏற்படுத்திக் கொடுப்பதில் கவனம் செலுத்துகிறது. டிஜிட்டல் அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களினூடாக, டிஜிட்டல் பொருளாதாரத்தில் இயங்குவதற்கு சமூகங்களுக்கு அவசியமான திறன்கள் பற்றிய விளக்கங்கள் பெற்றுக் கொடுக்கப்படுவதுடன், சகல மக்களுக்கும் பாகுபாடின்றி வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றன.

இந்தச் செயற்பாடுகள் உள்ளடக்கமான வளர்ச்சியை முன்னெடுப்பதிலும், தேசிய டிஜிட்டல் உள்ளடக்கத்தை மேற்கொள்வதிலும் பங்களிப்பு வழங்குவதுடன், இலங்கை டிஜிட்டல் யுகத்தினுள் முன்னேறும் நிலையில், எந்தவொரு சமூகமும் பின்தள்ளப்படாமல் இருப்பதை உறுதி செய்வதாகவும் அமைந்துள்ளது.

கலாநிதி. மோதிலால் டி சில்வா மேலும் குறிப்பிடுகையில், "SLT-MOBITEL இல், அனைவராலும் தொழில்நுட்பம் அணுகப்பட்டு, பயன்படுத்தப்பட வேண்டும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். டிஜிட்டல் மேம்பாட்டு செயற்பாடுகளினூடாக நாட்டின் சகல நபர்களும் பயன் பெறக்கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது என்பது எமது இலக்காக அமைந்துள்ளது. பாடசாலைகளை பைபர் மயமாக்கல், கிராமிய இணைப்புத்திறன், SME வலுவூட்டல் மற்றும் டிஜிட்டல் அறிவூட்டல் திட்டங்கள் போன்றவற்றினூடாக, முழுத் தேசத்துக்குமான உள்ளடக்கமான டிஜிட்டல் எதிர்காலத்தை நாம் உண்மையில் கட்டியெழுப்புகிறோம்." என்றார்.



கரூர்

# “கரூர் சம்பவத்துக்கு ஸ்டாலினே பொறுப்பு”

## அறிக்கை கோரும் உள்துறை அமைச்சு

“கரூர் சம்பவத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினே பொறுப்பேற்க வேண்டும் என பாரதிய ஜனதா கட்சியின் (பா.ஜ.க). மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், விபத்துக்கான சூழ்நிலை மற்றும் எடுக்கப்பட்ட மீட்பு நடவடிக்கைகள் குறித்து விரிவான அறிக்கையை தாக்கல் செய்யும்படி தமிழக அரசிடம் மத்திய உள்துறை அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

கரூரில் கூட்ட நெரிசலில் சிக்கி 40 பேர் உயிரிழந்த சம்பவத்தையடுத்து, அரசியல் தலைவர்கள், கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருக்கும், படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களையும் சந்தித்து ஆறுதல் கூறி வருகின்றனர்.

இந்த நிலையில், பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரனும் பாதிக்கப்பட்டவர்களை சந்தித்து ஆறுதல் கூறினார்.

அதன்பின், செய்தியாளர்களை சந்தித்த அவர் கூறுகையில்,

* எதிர்க்கட்சிகள் கூட்டத்திற்கு அரசும், காவல்துறையும் உரிய பாதுகாப்பு வழங்கவில்லை.
* ரூ.10 இலட்சம் கொடுத்து ஓர் உயிரை வாங்க முடியுமா?
* 39 பேரின் உயிரிழப்புக்கு தமிழக அரசும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும் பொறுப்பேற்க வேண்டும்.
* 6 மணி நேரத்திற்கு மேலாக காத்திருந்த தொண்டர்கள் தண்ணீர் கூட இல்லாமல் தவித்துள்ளனர்.
* கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா ரூ.1 கோடி ரூபாய் அரசு வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

ஐதராபாத்

# வெள்ளத்தில் மிதக்கிறது ஐதராபாத்

## ஆயிரக்கணக்கானோர் பாதிப்பு

தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தில் சனிக்கிழமை (27) அன்று பல இடங்களில் கொட்டி தீர்த்தது கனமழையால், ஐதராபாத்தின் பெரும்பாலான இடங்கள் வெள்ளத்தில் சூழ்ந்துள்ளன. கனமழையால் அங்குள்ள ஹிமாயத் சாகர் அணை திறந்ததே வெள்ளப்பெருக்கிற்கு காரணம் என்று கூறப்படுகிறது.



கனமழையின் காரணமாக இந்த அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென அதிகரித்ததையடுத்து, பாதுகாப்பு கருதி அணையில் இருந்து சனிக்கிழமை (27) நள்ளிரவில் அதிகளவிலான தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.இதனால் தண்ணீர் முசி ஆற்றில் பெருக்கெடுத்து ஓடியதோடு, குடியிருப்பு பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்தது. சடர்காட் மேம்பாலத்தை மூழ்கடித்த வெள்ளம், அதன் மேல் செல்லும் வீதியில் பொங்கி வழிந்துள்ளது. இதையடுத்து பாதுகாப்பு கருதி அந்த மேம்பாலமும் வீதியும் மூடப்பட்டுள்ளன.

மேலும் இந்த வெள்ளம் ஆற்றின் கரையோரம் உள்ள வீடுகளுக்குள் புகுந்தது. ரங்காரெட்டி மாவட்டம் மீர்பட் கார்ப்பரேஷன் எல்லைக்குட்பட்ட மிதிலா நகர் காலனியில் வீடுகளுக்குள் வெள்ளம் நுழைந்துள்ளது. இதையடுத்து, பாதுகாப்பு கருதி 1000-க்கும் அதிகமானவர்கள் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன், பல இடங்களில் மின்சாரம் தடைப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளாகினர்.

வொஷிங்டன்

## கொலம்பியா ஜனாதிபதியின்

# விசாவை இரத்து செய்த அமெரிக்கா

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை கடுமையாக விமர்சித்த கொலம்பியா ஜனாதிபதியின் விசாவை இரத்து செய்வதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சகம் அறிவித்துள்ளது.



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஐ.நா. சபை ஆண்டு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் ஒவ்வொரு நாட்டு தலைவர்களும் கலந்து கொண்டு பேசினார்கள். மேலும், பல்வேறு நாட்டு பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

ஐ.நா. சபை பொதுக்கூட்டத்தில் பாலஸ்தீன மக்களுக்கு எதிராக இனப்படுகொலையில் ஈடுபடுவதாக இஸ்ரேல் அரசுக்கு எதிராக பலவேறு நாட்டு தலைவர்கள் பேசினர். குறிப்பாக பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிப்பதாக பல நாடுகள் அறிவித்தன.

இந்நிலையில், ஐ.நா. சபை பொதுக்கூட்டத்தில் பேசிய கொலம்பியா ஜனாதிபதி குஸ்டாவோ, “காசாவில் நடக்கும் இனப்படுகொலைக்கு டொனால்ட் ட்ரம்ப்பும் உடந்தையாக இருப்பதாக குற்றம் சாட்டினார்.

இந்நிலையில், கொலம்பியா ஜனாதிபதி குஸ்டாவோவின் விசாவை இரத்து செய்வதாக அமெரிக்க அரசு அறிவித்துள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியது.

தனது விசா இரத்து செய்யப்பட்டுள்ளமை குறித்து கொலம்பியா ஜனாதிபதி குஸ்டாவோ வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், “அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிய படைகள் இனப்படுகொலையை ஆதரிக்க வேண்டாம் என்று கேட்டு கொண்டதற்காக எனது விசா இரத்து செய்யப்பட்டள்ளது. இது அமெரிக்க அரசாங்கம் சர்வதேச சட்டத்திற்கு இணங்கவில்லை என்பதைக் காட்டுகிறது. இனிமேலும் ஐ.நா. சபையின் தலைமையகம் நியூயோர்க்கில் இருக்க முடியாது" என்று தெரிவித்துள்ளார்.

மற்றொரு பதிவில் டொனால்ட் ட்ரம்பை ‘டொனால்ட் டக்’ என்று கூறி கொலம்பியா இஸ்ரேல் குஸ்டாவோ விமர்சித்துள்ளார்.

காசா

## காசாவில் இஸ்ரேல் நடத்திய

# வான்வழி தாக்குதலில் 32 பேர் உயிரிழப்பு

மத்திய மற்றும் வடக்கு காசாவில் சனிக்கிழமை (27) அதிகாலை இஸ்ரேல் இராணுவம் நடத்திய வான்வழி தாக்குதலில் 32 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதில் 9 பேர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல், காசா முனையில் தாக்குதல் நடத்தி வருகிறது. ஹமாஸ் அமைப்பினரை முழுமையாக அழிக்கும் வரை போர்நிறுத்தம் ஏற்படாது என இஸ்ரேல் அரசு உறுதியாக தெரிவித்துள்ளது. அதேவேளை, ஹமாஸ் அமைப்பினரிடம் உள்ள பணயக் கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும், இராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டுள்ளது.

இஸ்ரேல் இராணுவம் நடத்தி வரும் தாக்குதல்களால் காசா முற்றிலும் நிலைகுலைந்துள்ளது. இதுவரை சுமார் 65 ஆயிரத்துக்கும் அதிகமான பாலஸ்தீன மக்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் இலட்சக்கணக்கான மக்கள் தங்கள் வீட்டையும், வாழ்வாதாரத்தையும் இழந்துள்ளனர். காசா மீதான தாக்குதலை இஸ்ரேல் நிறுத்த வேண்டும் என்று பல்வேறு சர்வதேச நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

## இங்கிலாந்து பிரீமியர் லீக்:

# பலஸிடம் தோற்ற லிவர்பூல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், கிறிஸ்டல் பலஸின் மைதானத்தில் சனிக்கிழமை (27) அன்று நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான லிவர்பூல் தோற்றது.



லிவர்பூல் சார்பாகப் பெறப்பட்ட கோலை பெடெரிக்கோ சியெஸ்கா பெற்றதோடு, பலஸ் சார்பாக இஸ்மைலா சார், எடி நிகிட்டியா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற பிறைட்டன் அன்ட் ஹொவ் அல்பியனுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் செல்சி தோற்றது.
செல்சி சார்பாகப் பெறப்பட்ட கோலை என்ஸோ பெர்ணாண்டஸ் பெற்றனர். பிறைட்டன் சார்பாக டனி வெல்பக் இரண்டு கோல்களையும், மக்ஸிம் டி குய்பர் ஒரு கோலையும் பெற்றனர்.

இந்நிலையில் பிறெனஃபோர்ட்டின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-3 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் தோற்றது. யுனைட்டெட் சார்பாகப் பெறப்பட்ட கோலை பெஞ்சமின் செஸ்கோ பெற்றதோடு, பிறெனஃபோர்ட் சார்பாக இகோர் தியாகோ இரண்டு கோல்களையும், மதியாஸ் ஜென்சன் ஒரு கோலையும் பெற்றனர்.

இதேவேளை தமது மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (28) அன்று நடைபெற்ற வொல்வர்ஹம்ப்டன் வொன்டரேர்ஸுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் சமப்படுத்தியது. டொட்டென்ஹாம் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜோவா பலின்ஹா பெற்றதோடு, வொல்வ்ஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை சன்டியாகோ புவேனோ பெற்றிருந்தார்.



## இத்தாலிய சீரி ஏ தொடர்:

# சமநிலையில் ஜுவென்டஸ்-அத்லாண்டா போட்டி

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் சனிக்கிழமை (27) அன்று நடைபெற்ற அத்லாண்டாவுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் ஜுவென்டஸ் சமப்படுத்தியது.

ஜுவென்டஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜுவான் கபல் பெற்றதோடு, அத்லாண்டா சார்பாகப் பெறப்பட்ட கோலை கமல்டீன் சுலெமான் பெற்றிருந்தார்.



# நேபாளத்திடம் தோற்ற மேற்கிந்தியத் தீவுகள்

நேபாளத்துக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில், ஐக்கிய அரபு அமீரகத்தின் ஷாஜாவில் சனிக்கிழமை (27) அன்று நடைபெற்ற முதலாவது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் தோற்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மே. தீவுகள்

நேபாளம்: 148/8 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: றோஹித் பௌடேல் 38 (35), குஷால் மல்லா 30 (21), குல்சன் ஜா 22 (16), டிபேந்திர சிங் ஐரீ 17 (19) ஓட்டங்கள்.
பந்துவீச்சு: ஜேஸன் ஹோல்டர் 4/20 [4], நவீன் பிடைசீ 3/29 [4], அகீல் ஹொஸைன் 1/18 [4])

மே. தீவுகள்: 129/9 (20 ஓவ. ) (பந்துவீச்சு: குஷால் புர்டேல் 2/17 [4], லலிட் ரஜ்பன்ஷி 1/6 [2], நந்தன் யாதவ் 1/6 [1], றோஹித் பௌடெல் 1/20 [3], கரன் கே.சி 1/17 [3], டிபேந்திர சிங் ஐரீ 1/20 [3], றோஹித் பௌடேல் 1/20 [3])

போட்டியின் நாயகன்: றோஹித் பௌடேல்.

இரண்டு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டியானது இன்றிரவு 8 மணிக்கு நடைபெறவுள்ளது.




# தேர்வாளர் குழாமில் இணைந்த ஒஜா, ஆர்.பி. சிங்

இந்திய அணித் தெரிவு செயற்குழுவில் முன்னாள் வீரர்களான பிரக்யான் ஒஜா, ஆர்.பி சிங் ஆகியோர் இணைந்துள்ளனர்.

இதேவேளை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக போட்டியின்றி மிதுன் மன்ஹாஸ் ஏனைய நிர்வாகிகளுடன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஆண்டுக் கூட்டத்தில் 16 வயதுக்குட்பட்ட வீரரொருவர் தனது மாநிலத்தை ரஞ்சி கிண்ணத் தொடரில் ஒரு போட்டியில் பிரதிநிதித்துவப்படுத்தாமல் ஐ.பி.எல் விளையாட முடியாதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.



## ஸ்பானிய லா லிகாத் தொடர்:

# றியலை வீழ்த்திய அத்லெட்டிகோ

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், தமது மைதானத்தில் சனிக்கிழமை (27) அன்று நடைபெற்ற றியல் மட்ரிட்டுடனான போட்டியில் 5-2 என்ற கோல் கணக்கில் அத்லெட்டிகோ மட்ரிட் வென்றது. றியல் சார்பாக, கிலியான் மப்பே, அர்டா குல்லர் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். அத்லெட்டிகோ சார்பாக, ஜூலியன் அல்வரேஸ் இரண்டு கோல்களையும், றொபின் லீ நொர்மான்ட், அலெக்ஸான்டர் சொல்றொத், அந்தோனி கிறீஸ்மன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 29, செப்டெம்பர் 2025, இல.08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.